# எம். ஆர். ராதாவின் ரிவால்வா அடையாளம் காட்டப்பட்டது

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 191
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 5 ஐ! அவ். 14 திங்கட்கிழமை [21-8-67

## காவல்காரன்', 'நல்லவன் வாழ்வான்' படங்கள் பற்றியும் பிரஸ்தாபம்

சென்னை, ஆக. 20

"காவல்காரன் படத்துக்கான ஒலிப்பதிவு வாஹினி ஸ்ருடியோவில் நடந்தபோது, எம். ஜி. ஆர். நான்கு, ஐந்து தடவைகளுக்குமேல் 'டம்மி' தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கியை சுடவேண்டி ஏற்பட்டது. கடந்த வருடம் டிசம்பர் 30-ந் திகதி இது நடைபெற்றது. விசாரணையின் போது பொலிசாருக்கு இந்தப் படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது".

எம். ஜி. ஆர். - எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கில் நேற்றுத் தொடர்ந்து சாட்சியமளித்த ப நீலகண்டன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரைப்பட நடிகர் எம். ஜி ஆரை சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும், தன்னைத் தானே சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும் மற்றொரு திரைப்பட நடிகரான எம். ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

# திரைப்பட இறக்குமதி பாதியாகக் குறையும்

## உள்ளூர் படத்தயாரிப்பாளர் கோரிக்கையின் விளைவு

கொழும்பு, ஞாயிறு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் திரைப்படங்கள் பாதியாக குறைக்கப்படுமென தெரிய வருகிறது. இதனால் தமிழ், ஹிந்தி படங்கள் இலங்கையில் திரையிடப்படுவது குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள திரைப் படத்தயாரிப்பாளர்கள், அரசாங்கத்திற்கும் நிதிமந்திரிக்கும் செய்து கொண்ட புகாரைத் தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்பொழுது இலங்கையில் 87 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், 25 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், இப்படங்களை திரையிடுவதற்கு போதிய தியேட்டர்கள் இல்லையென உள்ளூர் தயாரிப்பாளர்கள் புகார் செய்துள்ளனராம்.

இலங்கையிலுள்ள தியேட்டர்களில், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழ், ஹிந்தி ஆங்கில படங்கள் திரையிடப்படுவதே இதற்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

உள்ளூர் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும், வெளிநாட்டு திரைப்படங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம், வெளிநாட்டுச்செலாவணியை மிச்சப்படுத்தலாம் என நிதி அமைச்சு கருதுவதாகவும் தெரியவருகிறது.

## தேர்தல் இடாப்பிலிருந்து 1200 பேருக்கு 'கல்தா'

### நயினாதீவில் மக்கள் அதிருப்தி

நயினாதீவு, ஞாயிறு

நயினாதீவில் கிராமசேவையாளரால் வீடு வீடாகச் சென்று வாக்காளர் இடாப்பு திருத்தவேலை நடைபெற்று வருகிறது. 1966-ம் ஆண்டும் அதற்கு முன்னரும் பல வருடங்களாகத் தொடர்ந்து வாக்காளர்களாக இருந்த சுமார் ஆயிரத்து இருநூறு வாக்காளர்களின் பெயர்கள் இவ்வாண்டு திருத்தத்தில் கிராம சேவையாளரால் நீக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அதிகாரியின் சுற்று நிருபத்தில் 1967ம் ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதி நயினாதீவில் வசிப்பிடமாகக் கொண்டவர் எவரும் பாராளுமன்ற வாக்காளர் டாப்பில் இருக்கவும், புதிதாகச் சேர்த்துக் கொள்ளவும், தகுதி உடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் தற்போது பதிவுசெய்யும் போது இங்கு இல்லை என்ற காரணத்தைக் கொண்டு நீக்கம் செய்வதால் பொது மக்கள் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விஷயமாக தகுந்த நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும்படி நயினாதீவு கிராமசபை உப தலைவர் திரு. அ. நல்லையா தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினத்தை கடிதமூலம் கேட்டுள்ளார்.

## 'அரசியல் வேற்றுமைகள் வெறுப்பாகக் கூடாது'

### சென்னையில் உப ராஷ்டிரபதி

சென்னை. ஆக, 20

'ஒரு ராஜ்யத்தில் ஆளும் கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் விளங்கும் அரசியற் கட்சிகள், தமது அரசியல் வேற்றுமைகளை வெறுப்பில் சென்று முடிய விட்டு விடக்கூடாது' என்று இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, நேற்றுச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றிப் பேசுகையில் கூறினார்.

ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் வேற்றுமைகள் நிலவுவது சகஜமென்றும், ஆனால் அவற்றை வெறுப்புணர்ச்சிக்களாக்கக் கூடாதென்றும் உப ராஷ்டிரபதி மேலும் குறிப்பிட்டார்.

### அண்ணாவுக்கு பாராட்டு

மது விலக்குக் கொள்கையைத் தொடர்ந்து அமுல் நடத்துவதென்ற தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரையின் உறுதியை உப ராஷ்டிரபதி பாராட்டினார்.

அரசியலில் பல வருட அனுபவம்வாய்ந்த அரசியற் தலைவரான திரு. வி. வி. கிரி, சகல அரசியற் கட்சிகளுக்கும்பொருத்தமான அறிவுரைதந்ததையிட்டு, நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கிய தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை மகிழ்ச்சி தெரிவித்தார்.

### 'மக்கள் சேவையே நோக்கமாகும்'

மக்களுக்குச் சேவைசெய்வதே எல்லா அரசியல் கட்சிகளின் நோக்கமாகுமெனக் கூறிய முதல் மந்திரி, வசதியற்ற மக்களை மேம்படுத்தும் முயற்சியில் தமது அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும், அதற்கு மற்றக் கட்சிகள் யாவும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

### மாணவர்க்கு அறிவுரை

பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, மாணவர்களை அரசியலில் தீவிரமாக ஈடுபட வேண்டாமென்று வலியுறுத்தினார். அதற்குப் பதிலாக, மாணவர்களை சமூகப் பணிகளில் அக்கறை செலுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

## பொதுமக்கள் அதிருப்தி

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு ஒருவாரமாக பெரும் பிரச்னையாக இருக்கிறது. இங்கு அம்புலன்ஸ் வசதி ஒருமாதகாலமாக இல்லாமலிருக்கிறது. திருத்தப்படுவதற்கு கொழும்புக்கு அனுப்பப்பட்ட அம்புலன்ஸ் இன்னும் திரும்பவில்லையாம்.

பருத்தித்துறை ஆஸ்பத்திரியிலிருந்தே அவசர தேவைக்கு அம்புலன்ஸ் அழைக்கப்படுகிறதாம். நோயாளிகளும் பொதுமக்களும் இதனால் பெருத்த அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

## போட்டியின்றி தெரிவு

உடுவில், ஞாயிறு

உடுவில் கிராம சபையின் 6-ம் வட்டாரத்திற்கு திரு. மயில்வாகனம் மகாலிங்கம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உடுவில் கிராம சபையின் 6-ம் வட்டார உறுப்பினர் திரு. மயில்வாகனம் குமாரவேல் ரயில்விபத்தில் அகால மரணமடைந்ததைத்தொடர்ந்தே இவ்வுபதேர்தல் நடைபெறுகின்றது.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு. ம. மகாலிங்கம் முன்னாள் உறுப்பினர் திரு. ம. குமாரவேலின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வல்லை நெசவு ஆலை

### லாபப்பணம் பகிர்ந்தளிக்கப்படும

இமையாணன், ஞாயிறு

இலங்கையின் வரையறை ஸ்தாபனமாகிய உடுப்பிட்டியில் உள்ள "வல்லை நெசவு ஆலையின்" பங்குகாரர்களுக்கு பங்கு லாபம் பகிர்ந்தளிக்கப்பட விருக்கிறது. 1965-ம் ஆண்டுவரை நஷ்டத்தில் இயங்கிவந்த இந்த ஆலை இப்பொழுது உற்பத்தியிலும் லாபத்திலும் துரித முற்னேற்றமடைந்து வருகிறது. 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுமார் 10லட்சம் கொண்டமுதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை சுமார் ஆயிரம் ரூபாயளவில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. ஆனால் 1966-ம் ஆண்டு சுமார் 7,500 ரூபாயும் இந்த வருடம் முதல் ஆறுபாத காலத்தில் சுமார் 5,000 ரூபாவும் லாபத்தைக்

(8-ம பக்கம் பார்க்க)

சிங்கம் மார்க்
LION BRAND SANDANADI THYLAM
சிங்க மார்க்
சந்தனாதித் தைலம்
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்கள்:-
போன் 2300 & 3200
ப. மு. சேன்ஸ்.
88. செட்டியார் தெரு, கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

டயர்கள்

கீழ்க்காணும் அளவுள்ள பாவித்த டயர்கள் விற்பனைக்குண்டு. 700—20, 750-20, 825-20, 900-20, 750-16. சிற்றி டயர்ஸ்ரோஸ், 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2306

காணி

சுண்டிக்குளியில் 3 பரப்பு. ரூபா 18,000/-க்கு மேற்பட்ட மிகக்கூடிய விலைக்கு விற்கப்படும். கே. பரமோதயன், ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 2304

### 3-ம் வருட ஞாபகம்

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திருமதி அந்தோனிப்பிள்ளை அன்னம்மா அவர்களின் 3-ம் வருட மரண ஞாபகார்த்தம் இம்மாதம் 21-ந் திகதியாகும். அன்னாரின் இயற்கை சமாதானத்தோடு நிறைவெய்துக. 2303

### தேவை

கார்

நல்ல நிலைமையிலுள்ள EL, EN வோக்ஸ்வகன் அல்லது பேர்ஜோ 203, கார் உடன் தேவை. P. பாலேந்திரா, தொண்டமானுறு. 2302

## இளைஞர் விவசாயிகள் கழகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் இளைஞர் விவசாயிகள் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் கொக்குவில் கிழக்கு 'மனோன்மணி' வாசிகசாலைக் கட்டடத்தில் நடந்தது. ஐம்பதிற்குமதிகமான அங்கத்தவர்களை அடக்கிய இக்கழக வைபவத்தின் போது உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது.

தலைவர்: திரு. கு. ஆனந்தராசா, உபதலைவர்: திரு. க. ஜெயராஸ், காரியதரிசி: திரு. ச. தட்சணாமூர்த்தி, உபகாரியதரிசி: திரு. வே. மகேந்திரன், தனாதிகாரி: திரு. க. பாலசுப்பிரமணியம், சேவைபொறுப்பாளர்: திரு. சி. ஜெயபாலசிங்கம்.

மூன்று பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'ஆதி அந்தம் இல்லாதது'

சாவகச்சேரி, ஞாயிறு

''சைவசமயம் என்று தொடங்கியதோ அன்றே தமிழ் இசையும் தொடங்கியது. தமிழினதும் தமிழ் இசையினதும் ஆதியும் அந்தமும் எவராலும் காணமுடியாது.

இவ்வாறு தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் 12-வது ஆண்டு இசைவிழா முதலாம்நாள் நிகழ்ச்சி சாவகச்சேரி சந்திரசேகரவாரிவன நாதர் சிவன்கோவில் முன்றலில் நடைபெற்றபோது விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய யாழ்ப்பாண தலைமையதிகாரி திரு. ஆ. கந்தையா கூறினார். விழாவை திரு. சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார்.

சங்கத்தானை மங்கையர் மன்றத்தினரின் கூட்டுப் பாடலும் செல்வி வரதாமணி வேலாயுதபிள்ளையின் பாட்டும், செல்வி கருணை கலாவல்லியின் வயலினும் திருமதி விஜயலட்சுமி ஆறுமுகசுவாமியின் பாட்டும் இடம்பெற்றன.

## அமைச்சருக்கு கோரிக்கை

புங்குடுதீவு, திங்கள்

பண்ணைப்பாலத்தால் ஊர்காவற்றுறை புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு செல்லும் பாதைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் இதனூடாகச் செல்லும் மோட்டார் வாகனங்களும் பாதசாரிகளும் மிகவும் கஷ்டமடைய வேண்டியிருப்பதாகவும் இதனை நேரில் பார்வையிட்டு சீர்திருத்தி விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமராமத்து அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் வேலணைக் கிராமசபைத் தலைவரும் உப தலைவரும் கரம்பன் ஊர்காவற்துறையைச் சேர்ந்த பிரமுகர்களும் கேட்டுள்ளனர்.

## உதவி

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட புற்றுநோய்நிவாரணதேசிய சங்கத்தினர் மேலும்புதியநோயாளர் ஒருவருக்கு உதவிப் பணம் அளித்துள்ளனர். கரவெட்டி மேற்கு பகுதியில் உள்ள எஸ். ஆழ்வார் என்பவரே அந்நிவாரணம்பெறுபவராவார்.

## விளம்பரம்

# நாவற்குழி கிராமசபை
# கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ம் திகதி நண்பகல் 12 மணிவரை நாவற்குழிக் கிராமசபை அக்கிராசனரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு மெழுகுசீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் பதிவுத் தபால்மூலம் கிராமசபை அக்கிராசனருக்கு அனுப்பப்பட வேண்டும். கேள்வியின் நகல் பிரதியொன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அதே நேரத்தில் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்வியைக் கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் வீதப்படி கேள்விப் பிணைப்பணம் கட்டியதன்பேரில் கிராமசபை அக்கிராசனரால் 29-8-67 நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரப் பணமாக கீழ்க்காணும் வீதப்படி கட்ட வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்கள் எதுவும் நாவற்குழி கிராமசபை அலுவலகத்திலாவது அல்லது உள்ளூராட்சி அமைச்சு யாழ்ப்பாண அலுவலகத்திலாவது அறிந்துகொள்ளலாம்.

| வேலைகளின் விபரங்கள் | கேள்விப் பிணைப்பணம் | கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|
| 1. கிராமசபைக் கந்தோர்க் கட்டிடம்கட்டுதல் | ரூபா 100-00 | ரூபா 25-00 |
| 2. மறவன்புலோ சுடலையிலிருந்து மறவன்புலோ மணல்காடு சகலகலாவல்லி பாடசாலை ரோட்டு அமைத்தல் | ரூபா 100-00 | ரூபா 25-00 |
| 3. கைதடிநாவற்குழிகடற்கரைரோட்டு அமைத்தல் | ரூபா 100-00 | ரூபா 25-00 |
| 4. கைதடி அம்பட்டன் தம்பிக்கிணறு வெட்டிக் கட்டுதல் | ரூபா 10-00 | ரூபா 10-00 |

கிராமசபை அலுவலகம்,
நாவற்குழி, கைதடி,
19-8-67.

118

கா. ஆறுமுகம்,
அக்கிராசனர்,
கிராமசபை, நாவற்குழி.

## ரயில்மோதி மரணம்

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த நாகர் ஐயம்பிள்ளை என்ற நபர் சென்ற வியாழக்கிழமை காலை காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சியை நோக்கி வந்துகொண்டிருந்த புகையிரதத்தில் மோதுண்டு மரணமானார். மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் நடந்த மேற்படி நபரின் மரணத்தையிட்டு விசாரணை செய்த மல்லாகம் - உடுவில் கோவிற்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எ. எஸ். தாமோதரம்பிள்ளை விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## மின் ஒளி பெற்று ஒரு வருடம்

சங்கானை, ஞாயிறு

மின்விளக்குப்பெற்று ஓர் ஆண்டு பூர்த்தி விழாவை சங்கானைப் பட்டின சபையினர் நேற்று பட்டினசபை காரியாலயத்தில் கொண்டாடினர்.

## மந்திரி விஜயம் செய்வார்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பகுதிக்கு சுகாதார அமைச்சர் திரு. எம். டீ. எச். ஜெயவர்த்தனு செப்ரெம்பர் மாதம் முதர் திகதி உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார். அவருடன் சுகாதார சேவைகள் அதிபர் திரு. ஹெரந் குணரத்ன நிரந்தரக்காரியதரிசி திரு. கே. பாலசிங்கம் ஆகியோரும் விஜயம் செய்வார்கள்.

## ஆண்டு விழா

சாவகச்சேரி, ஞாயிறு

சரசாலை தெற்கு பயிர்ச் செய்கைக் குழுவினதும், கிராம முன்னேற்றச் சங்கங்களினதும் ஆண்டு விழா இன்று மாலை 4 மணிக்கு சரசாலை மத்திய சமூகசேவா சங்க மண்டபத்தில் சாவகச்சேரி எம்பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

## சங்கிலியை திருட முயன்றாராம்!

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி இராசநாயகம் சிவக்கொழுந்து என்பவரின் குழந்தை அணிந்திருந்த சுமார் 300 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை சுன்னாகம் பஸ்நிலையத்தில் வைத்துஒருவர் திருட முயன்று பொதுமக்களால் இவர் நையப்புடைக்கப்பட்டாராம்.

சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் மேற்படி நபர் குருநாகலைச் சேர்ந்தவரெனத் தெரியவருகிறது.


ராதா மணிமார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 5 4 1 Residence: 7 0 6 8

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
ஃபோயாதினங்களில் 4காட்சிகள்
ஏ. வி. எம், ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நடித்த
நீ

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
பி.ப. 4-45, 7-00, 9-45.
Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m. 9-45 p. m.
Robert Vaughn &
Dorthy Provine
in
One Spy Too Many

2-வது வெற்றி மாதம்!

லிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜிதா [ஹட்டன்]
விஜயா [மட்டக்களப்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்

# அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன உள்நாட்டுப்போர்

## கான்டன் விமானநிலையம் மா எதிர்ப்பாளர் கைகளில்

பீகிங், ஆக. 20

சீனுவிலுள்ள குவெஞ்சோ மாகாணத்தில் மா சே துங் எதிர்ப்பாளர்கள் இராணுவத்தினரைத் தாக்கியுள்ளனர். அங்குள்ள உயர் அதிகாரிகள் சிலரையும் அவர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களே இக்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியதாகக் கூறப்படுகிறது.

### கான்டனில் கடும் சண்டை

கான்டன் மாகாணத்தில் விமானநிலையத்தைக் கைப்பற்றியுள்ள மா எதிர்ப்பாளர்க்கும், துருப்புகளுக்குமிடையே கடும் சண்டை நடப்பதாகத் தகவல் கிடைத்துள்ளன.

## பிரிட்டிஷ்-அமெரிக்கா எண்ணெ உடைமைகளை தேசியமயமாக்குதல்

### பாக்தாத்தில் கூடிய அரபு மந்திரிகள் முடிவு

பாக்தாத், ஆக. 20

பாக்தாத்தில் கடந்த 5 தினங்களாகக் கூடிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தும் அரபு நிதி, பொருளாதார, எண்ணெ மந்திரிகள், தமது தீர்மானங்களுக்கு இறுதி உருவம் அமைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேலுக்கு ஆதரவளித்த மேற்கத்தைய நாடுகளுக்கு எதிராக எடுக்க வேண்டிய பொருளாதாரத் தடை நடவடிக்கைகளையிட்டு இந்த அரபு மந்திரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

மாநாட்டின் மூன்று துணைக் கமிட்டிகள் பல ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ளன.

### ஏகோபித்த ஆதரவு

இவற்றில், அரபு நாடுகளிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெ நிலையங்களையும், உடைமைகளையும் படிப்படியாகத் தேசியமயமாக்குவது ஒன்ருகும். இந்தத் தீர்மானத்துக்கு அரபு நாடுகளிடையே ஏகோபித்த ஆதரவு கிடைத்திருக்கிறது.

### உச்சிமாநாடு

இதற்கிடையில் அரபுநாடுகளின் உச்சிமாநாடு இம்மாதம் 28-ந் திகதி நடைபெறவிருக்கிறது சூடான் ஜனுதிபதி, மற்றைய அரபு நாடுகளின் தலைவர்களை இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

## மலாவியைச் சீன விலைக்கு வாங்க முயற்சித்தது

### டாக்டர் பண்டா புகார்

ஸோம்பா, ஆக. 20

சீனுவை மலாவி அங்கீகாரம் செய்வதற்கு, மலாவிக்குப்பணங் கொடுத்து அதனை விலைக்கு வாங்கச் சீன முயற்சித்ததாக மலாவி ஜனுதிபதி டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா அறிவித்துள்ளார்.

சீனுவிடம் பணம் பெற்ற குற்றத்துக்காகத் தமது மந்திரி சபையில் 6 மந்திரிகளை நீக்கியிருப்பதாகவும் டாக்டர் பண்டா தெரிவித்தார்.

### பல முயற்சிகள்

மந்திரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டபின்னர் தமது அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டதாகவும் டாக்டர் பண்டா கூறினுர்.

சீன, இத்தகைய நடவடிக்கைகளால், ஆபிரிக்காவில் தனது செல்வாக்கை இழந்துவருவதாக டாக்டர் பண்டா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 3 லட்சம் அரபுகள் வீடிழந்தனர்

நியூயோர்க், ஆக 20

நடந்துமுடிந்த அரபு-இஸ்ரேல் போரில் மூன்று லட்சத்துக்குமதிகமான அரபு மக்கள் வீடிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா, பொதுக்காரியதரிசி யூதாண்டின் அறிக்கையொன்றில் இத்தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று லட்ச மக்களும் அரபு நாடுகளிலேயே இருப்பதாகவும் இவர்களில் பாதிப்பேர் இஸ்ரேலுக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## எல் அரிஷ் நகரில் ஊரடங்குச் சட்டம்

கெய்ரோ, ஆக 20

வடசீனுப் பகுதியிலுள்ள எல். அரிஷ்நகரில் இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் ஊரடங்குச்சட்டத்தைப் பிரகடனஞ் செய்துள்ளனர்.

எல் அரிஷ், கடந்த அரபு இஸ்ரேல் போரில் இஸ்ரேலினுல் கைப்பற்றப்பட்டது.

அங்குள்ள அரபு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் மூடிவிட்டு, அவற்றின் மீது ஐக்கிய அரபுக் [illegible] குடியரசுக் கொடிகளைப் பறக்கவிட்டதைத் தொடர்ந்தே இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சீனத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

### இந்தோனேஷியாவில்

ஜாகர்த்தா, ஆக 20

ஜாகர்த்தாவிலுள்ளசீனத் தூதரகத்தின் முன்னுல் பல்லாயிரக் கணக்கான இந்தோனேஷியர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்தோனேஷியத் துருப்புகள் டாங்கிகளுடன் சீனத் தூதரகத்தைபாதுகாத்தன.

ஆர்ப்பாட்டக்காரர் ஒரு மணிநேரத்துக்குப் பின் கலைந்துசென்றனர்.

## நைஜீரியாவில் விமான தாக்குதல்

லாகோஸ், ஆக 20

சமஷ்டி நைஜீரியாவிலுள்ள எண்ணெ சேகரிப்பு நிலையமொன்றின் மீது பிரிவினை 'பியாவ்ரா' விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 'பியாவ்ரா' மீதான விமான தாக்குதல் இப்போதுஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளதாகச் சமஷ்டி [illegible] வட்டாரங்கள் [illegible] ளன.

## சீனுவில் ரஷ்ய தூதரகதாக்குதல்

### 'பிராவ்டா' கருத்து

மாஸ்கோ, ஆக 20

அண்மையில் பீகிங்கிலுள்ள ரஷ்யத் தூதரகம் ஆர்ப்பாட்டக்காரரின் தாக்குதலுக்குள்ளாகியிருந்ததையிட்டு, 'உள்நாட்டுப்பிரச்னைகளிலிருந்து மக்களைத் தாயகம் திருப்பும்சீன அரசாங்க முயற்சி' என ரஷ்ய பத்திரிகை 'பிராவ்டா' குறிப்பிட்டுள்ளது.

இத்தாக்குதலின் மூலம் ரஷ்ய - சீன உறவுகளை மேலும் மோசமாக்கச் சீன முயன்றுள்ளதாகவும் மா ஆதரவாளர் சீனுவில் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயற்சிசெய்வதாகவும் 'பிராவ்டா' கூறியுள்ளது.

## ஏடனில் உள்ள பிரிட்டிஷ் பொலிஸ்

### இராணுவ பாதுகாப்பு

ஏடன், ஆக 20

ஏடனில் பிரிட்டிஷ்பொலிசார், மோட்டார் சைக்கிள்களில் அல்லது கார்களில் ரோந்து சுற்றப் போகும்போது இராணுவ பாதுகாப்புடனன்றிச் செல்லக்கூடாதென அங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

அண்மையில் ஏடனில் அரபு தீவிரவாதிகள் 3 பிரிட்டிஷ் பொலிஸ் காரரைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

### 53 பேர் கொலை

கடந்த நான்கு வருடங்களாக ஏடனில் நடைபெற்றுவரும் அரபு தீவிரவாத இயக்கத்தில் மொத்தம் 53 பிரிட்டிஷ்பொலிஸ்காரர் கொல்லப்பட்டுள்ளனர்.

## இந்தியாவுக்கு பர்மா அரிசிக் கப்பல்

### இலங்கை திருப்பியது

புதுடில்லி, ஆக 20

இலங்கை மற்றுமோர் அரிசிக் கப்பலை இந்தியாவுக்குத் திருப்பியுள்ளது.

பர்மாவிலிருந்து 8,200 தொன் அரிசி கொண்டு இலங்கை நோக்கி வந்த கப்பலை இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை அரசாங்கம் கேரளத்துக்குத் திருப்பியுள்ளது.

இக்கப்பல் கொச்சின் துறைமுகத்தை வந்துசேர்ந்துள்ளது

## இந்திய-யூகோ. வர்த்தகம்

### அபரித அபிவிருத்தி

புதுடில்லி, ஆக. 20

இந்தியாவுக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் இடையே வர்த்தகம் அதிகரித்துவருவதாக, இரு நாடுகளினதும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சென்ற வருடத்துக்கு முன் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் ரூபா 4 கோடியே 60 லட்சம் பெறுமதியாக இருந்தது. சென்ற வருடத்தில் இப்பெறுமதி ரூபா 37 கோடியே 60 லட்சமாக உயர்ந்தது.

இவ்வருடம் இரு நாடுகளுக்கும் இடையே ரூபா 75 கோடி பெறுமதியாக வர்த்தகம் நடக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## அகதிகள்

லண்டன், ஆக. 20

மேற்கு ஆசிய யுத்தத்தின் போது தமது இல்லங்களை விட்டு ஓடி இஸ்ரேலில் அகதிகளாக இருந்த ஜோர்டான் மக்களின் முதல் கோஷ்டியான 350பேர் நேற்றுஜோர்டான் நதியைக் கடந்து தமது இல்லங்களை [illegible] உள்ளனராம்.

## ரொடீஷியாவில் ஆபிரிக்க தேசீயவாதிகள் துருப்புகளுடன் மோதல்

### 74 பேர் பலி

சாலிஸ்பரி, ஆக. 20

ரொடீஷியாவில் ஆபிரிக்க தேசிய வாதிகளுக்கும் பாதுகாப்புப் படைகளுக்குமிடையே மோதல்கள் நிகழ்ந்துள்ளன. இவை ரொடீஷிய — ஸாம்பியா எல்லைக்கருகே நடைபெற்றுள்ளன.

ஆபிரிக்க தேசியவாதிகள் ரொடீஷிய துருப்பினரில் 60 பேரைக் கொன்றுள்ளதாகவும், ரொடீஸியத் துருப்புகள் 14 ஆபிரிக்கத் தேசியவாதிகளைக் கொன்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கூட்டுறவு முறையில் விமோசனம் பெறலாம்'

### — செனட்டர் சு. நடராசா

யாழ்ப்பாணம், திங்கள்

"கூட்டுறவுமுறையினுல் எங்கள் நாட்டு மக்கள் எல்லாத்துறைகளிலும் விமோசனம் பெறலாம். மக்களுக்கு வருகின்ற நோயைக் கூட கூட்டுறவு அடிப்படையில் தீர்த்துவைப்பதற்கு தெல்லிப்பழைஐக்கிய வைத்தியசாலையே சிறந்த எடுத்துக்காட்டாகஇருக்கின்றது. மிகச் சிறிய அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை இன்று பெருமளவில் வளர்ந்திருப்பதற்கு மக்கள் காட்டியுள்ள ஒத்துழைப்பும் ஆதரவுமே தான் காரணமாகும்".

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையில் முழுநேர வைத்திய நிபுணராக கடமையாற்ற வந்துள்ள டாக்டர் சி. வி. செங்கம்மாவையும், பகுதிநேர கண் வைத்திய நிபுணராக கடமையாற்ற வந்துள்ள டாக்டர் ஆனந்தராசாவையும் வரவேற்றுப் பேசும்போது செனட்டர் திரு. சு. நடராசா குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. வ. சரவணமுத்து பேசும்போது வைத்தியநிபுணர்கள் இருவர் இங்கு மக்களுக்காக சேவை புரிய வந்துள்ளது பெரும்பாக்கியமெனக் கருதுகிறேன் எனக் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் சாமுவேல் சின்னையா பேசும்பொழுது இந்த இரு நிபுணர்களும் இங்கு ஒரே நேரத்தில் கடமையாற்ற வந்துள்ளதையிட்டுமகிழ்ச்சியடைவதாகவும், இவர்களின் சேவைக்கு வேண்டிய உபகரணங்கள் தளபாடங்கள் அனைத்தையும் சங்கம் கொடுப்பதற்கு எடுத்து வருகின்ற பெருமுயற்சியை நான் பாராட்டுவதாகவும் கூறினுர்.

வைத்தியநிபுணர்கள் இருவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி கூறினுர்கள். திரு. அ. சரவணமுத்து, டாக்டர் சி.குமாரசாமி ஆகியோரும் பேசினுர்கள்.

## 'அமெரிக்கா தயார் ஆனுல்....'

வாஷிங்டன், ஆக. 20

"அமெரிக்கா குண்டு வீசுவதைசிறிதுகாலத்துக்குநிறுத்தும்-ஆனுல் வடவியட்னும் அதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால்...."

இவ்வாறு அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

அமெரிக்கா பேச்சுக்கு தயாராக இருக்கிறதென்றும், ஆனுல் ஹனேயின் போக்கில்தான் மாற்றத்தைக் காணமுடியாதிருக்கிறதென்றும் அவர் கூறினுர்.

## ஆசிய டேபிள் டென்னிஸ்போட்டி

### ஜப்பானின் அபார வெற்றி

சிங்கப்பூர், ஆக. 20

சிங்கப்பூரில் நடைபெற்ற 8-வது ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில், 11 சாம்பியன் பட்டங்களில் பத்தையும் ஜப்பான் கைப்பற்றியுள்ளது.

பெண்கள் ஒற்றையர் போட்டியில் மட்டும், ஜப்பான் வெற்றிபெற முடியாமல் தென் கொரியா தடுத்து விட்டது.

## பொதுநல நாடுகள் பாதுகாப்பு மாநாடு

லண்டன், ஆக. 20

இம்மாதப் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் பொது நல நாடுகள் பாதுகாப்பு மாநாட்டுக்கு தான்ஸானியாவும், உகாண்டாவும் அழைக்கப்பட்டுள்ளன.

தான்ஸானியா இந்த அழைப்பை ஏற்றுள்ளது. ஆனுல், உகாண்டா அழைப்பை நிராகரித்துவிட்டது.

## பஸ்ஸில் தீப்பிடித்தது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில்நின்றுகொண்டிருந்த புதிய பஸ் ஒன்று நேற்றுக்காலை தீப்பிடித்துக்கொண்டது. உடன் நடவடிக்கை காரணமாக தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரயாணி ஒருவர் புகைபிடிப்பதற்காக நெருப்புப் பற்ற வைத்தபோது அவர் அருகில் இருந்த ஸ்பிரிட் கலந்த தீந்தைத் தகரத்தில் தீ பிடித்துக் கொண்டதாலேயே இத் தீவிபத்து ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

## மாணவ ஆசிரியர்

கொம்பனித்தெரு, ஞாயிறு

கல்வி இலாகா 2,500 மாணவ ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு 1968 ஜனவரியில் தெரிவுப் பரீட்சைஒன்றை நடத்த முடிவு செய்துள்ளது. இந்தமாணவ ஆசிரியர் தெரிவில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இருந்து தெரிவுசெய்யப்படுவார்கள்.

## மேற்கு வங்காளத்தில் எண்ணெ சுத்திகரிப்பு நிலையம்

கல்கத்தா, ஆக. 20

மேற்கு வங்காளத்தில் ஓர் எண்ணெ சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ மத்திய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இந்நிலையம், ருமேனியா, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளினதும் உதவியுடன் நிறுவப்படும். 1970-71ம் ஆண்டில் நிலையம் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உலகில் ஏதாவது வேலை செய்கையில் ஒரு கையால் இறைவனைப் பற்றி மற்ருெரு கையால் வேலை செய்க. வேலை இல்லாதபோது இரு கைகளாலும் இறைவன் பாதங்களைப் பற்றிக் கொள்ளவேண்டும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞூ ஆவணி மீ 5 — 21-8-67


## சரியான பதில்

'காரசாரமான' வார்த்தைப் பிரயோகங்களுடன் இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் இலங்கை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த 'மிரட்டல்' ஆட்சேபக் குறிப்புக்கு இலங்கை அரசாங்கம் அடக்கமான முறையில் ஆனல் உறுதியான தொனியில் பதிலளித்திருக்கிறது. சீனத் தூதரகம் தனது குறிப்பில் இலங்கை அரசாங்கத்தின்மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நிராகரித்துவிட்ட அரசாங்கம், ''இலங்கையின் சுயாதிபத்திய உரிமையிலும் உள்நாட்டு விவகாரங்களிலும் வெளியார் தலையிடுவதை அனுமதிக்க முடியாது'' என்றும் உறுதியுடன் கூறியிருக்கிறது.

எழுபது கோடி மக்களைக் கொண்ட சீன பலம்வாய்ந்த நாடாக இருக்கலாம். ஆனல் அந்தப்பலத்தைக் காட்டி சிறிய நாடுகளை மிரட்டுவதற்கு சீன மக்களே ஒப்புக் கொள்ளுவார்களா என்பது சந்தேகமே. சீனத் தூதரகத்தின் 'மிரட்டல்' குறிப்புக்கு இலங்கை அளித்துள்ள பதில் சரியான, நியாயமான பதில் என்பதை சீன அரசாங்கமே ஒப்புக் கொள்ள வேண்டும். சீன ஒப்புக் கொள்ளத் தவறினலும் உலக நாடுகளும் அகில உலகமும் ஒப்புக் கொள்ளுமென்பது நிச்சயம். சீனத் தூதரகத்தின் ஆட்சேபக் குறிப்புக்கு அரசாங்கம் அளித்த பதிலை யார் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இலங்கை மக்கள் ஒப்புக் கொள்வர். அவர்கள் நிச்சயம் தலைநிமிர்ந்து நடப்பார்கள்.

துறைமுகத்தில் நடந்த திருட்டுச் சம்பவங்கள் சாதாரணமாக பல நாடுகளிலும் நடைபெறும் சம்பவங்கள்தான். ஆயினும் அரசாங்கத்துக்கு 'எக்கச்சக்கமான' நிலையை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் இலாபம் காண முனைவோரின் சதியாகவும் இந்தச் சம்பவங்கள் இருக்கக் கூடும். இதுவிஷயத்தில் அரசாங்கம் கவனமாக இருப்பது நல்லது.

சீன உட்பட சகல நாடுகளுடனும் நட்புறவுடன் வாழ்வதே இலங்கையின் கொள்கை. சீனத் தூதரகம் இதை இனியாவது உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இலங்கை-சீன நட்புறவும் இரு நாடுகளுக்கிடையேயுள்ள வர்த்தக உறவும் பாதிப்பதற்கு எந்தவித காரணமும் இல்லை என்பது உண்மையே. இலங்கை அரசாங்கமும் இதையே தெரிவித்துமிருக்கிறது. என்ருலும் உள்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்து நமது தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்வதற்கு தீவிர முயற்சி செய்யும் அதேசமயம் இப்போதைய நமது அரிசித் தேவைக்கு ஒரு நாட்டையே நம்பியிருப்பது நல்லதல்ல. வெளியார் மிரட்டலுக்கு இனியும் இடம் கொடுக்காமல் நமது தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசியல் தலைவர்களும் மக்களும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டிய அவசியம் இதைவிட வேறு இருக்க முடியாது.

# வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களையும் மாவட்டசபை சிங்களவராக மாற்றிவிடு

பாரிஸ்டர்

**எம். சிவானந்தன்**

மத்திய அரசாங்கத்தில் தங்கள் கல்வித் திறமையினல் கூடிய பங்கைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தை அடக்கி, ஒடுக்கி அவர்களை நிரந்தர அடிமைகளாக்க எது சுலபமான வழியென சீமையில் படித்தகாலம் தொட்டு சிந்தனை செய்து, பட்டம் பெற்று இலங்கை வந்தபின் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் மூளையில் உருவானதுதான் இந்த மாவட்ட சபைத்திட்டம். இத்திட்டத்தின் உட்கருத்தை அறிந்துகொள்ளமுடியாத சில அரசியல் தலைவர்கள், இதனல் வரும் ஆபத்தை உணர்ந்து கொள்ள மறுக்கும் சில தமிழ் தலைவர்கள் இதனல் நன்மைகிடைக்குமென நப்பாசை கொண்டுள்ளார்கள்.

### பண்டாதிட்டம் நன்மைதருமா?

24 மணித்தியாலத்தில் தனிச்சிங்களத்தை கொண்டு வருவேன் என மார்புதட்டி வீரம்பேசி பிரதமராக வந்தும் அதைச் செயலில்காட்டிய ஒருவரின் மூளையில் உருவாகிய மாவடசசபைத் திட்டம் எப்படி தமிழருக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கும்? 56-ம் ஆண்டு தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவந்து ஆயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களை அரசாங்க சேவையிலிருந்து வெளியேற்ற வழிவகுத்தார் திரு. பண்டாரநாயக்கா. இதன் பின்பும் தமிழ் ஊழியர்களில் பலர் சிங்களத்தில் தேர்ச்சிபெற்று தொடர்ந்து உயர் பதவி வகித்துவந்த திரு. பண்டாரநாயக்காவை உறுத்தியது. தமிழர்களை முற்றாக அரசாங்க சேவையில் இருந்து வெளியேற்றுவது எப்படிஎன அவர் சிந்தனை செய்தார். சீமையிலிருந்து வந்தபோது தன் சிந்தையில் உருவான பிரதேசசபை மூலம்தான், இக்காரியத்தை சுலபமாக செய்துமுடிக்கலாமென தீர்மானித்தார். அவசரமவசரமாக பிரதேசசபை கொடுக்க முன்வந்தார். மக்கள் மத்தியில் உருவான எதிர்ப்பின் காரணமாக பிரதேச சபை கருவிலேயே அழிந்துவிட்டது.

### மீண்டும் அதே பல்லவி

இப்பொழுது மீண்டும் மாவட்டசபை என்ற ரூபத்தில் பண்டாரநாயக்காவின் திட்டத்தைசுருக்கிகொடுக்க பிரதமர் டட்லி விரும்பியுள்ளார்.

இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களிலும் 22 மாவட்ட சபைகள் அமைக்கப்படும். இவற்றுள் யாழ்ப்பாணம், மன்னர், வவனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய 5 மாவட்ட சபைகளும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இயங்கும். இந்த 5தில் யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் தமிழில் நிர்வாகம் நடைபெறலாம். மற்றும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள நான்கு மாவட்டங்களிலும் தமிழில் நிர்வாகம் நடைபெறுமென உறுதி கூறமுடியாது.

## மாவட்டசபை

### தமிழில் ஆட்சி நடக்காது

மாவட்டசபை வந்தால் தமிழில் ஆட்சி செலுத்தலாம என்று கூறுவது முற்றிலும் தவருனது. மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு கீழ்த்தான் மாவட்டசபைகள் இயங்கும் என பிரதமர் கூறியுள்ளார். தற்பொழுதுவடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் உத்தியோக மொழியான சிங்களம் தீவிரமாக அமுல்செய்யப்பட்டு வருகிறது. தமிழ்மொழி விசேஷ விதிகள் பேச்சளவில் தான் இருக்கிறது தமிழ்மொழிமசோதாநிறைவேற்றப்பட்டுங்கூட யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க காரியாலயங்களிலிருந்தும் தமிழில் பதில் கிடைப்பதில்லை. தமிழ் எம்.பிக்களுக்கே, யாழ்ப்பாணக் கந்தோரிலிருந்து தமிழ் பதில் கிடைப்பதில்லை

தமிழ்மொழி மசோதா நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடத்தின் பின்பும் யாழ்ப்பாணத்தில் இந்த நிலையென்ருல் மாவட்டசபை வந்தால் இங்கு தமிழ் ஆட்சி வந்துவிடுமா? மத்தியஅரசாங்கத்தின் கீழ் இயங்கும் மாவட்டசபைகளை நினைத்த நேரத்தில் கலைத்துவிட முடியுமல்லவா.

### வடக்கு, கிழக்கில் என்ன இருக்கிறது?

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளாகிய வட கிழக்கில் இயற்கை வளம் எதுவுமே இல்லை. மலையில்லை ஆறில்லை. மழை கூடஇல்லை. தமிழர் அன்றுதொட்டு அரசாங்க உத்தியோகத்தை நம்பியே வாழ்ந்துவந்தனர். ஆயிரக்கணக்கான தமிழர், மலேயா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளுக்குச் சென்று வேலைபார்த்து யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களின் குடும்பங்களைக் காப்பாற்றிவந்தனர். இன்றுவல்ந... கூட யாழ்ப்பா... நூற்றுக்கணக்கான ... பங்கள்சிங்கப்பூர் பெ... பணத்தில் உயிர் வ... றன.

இந்த நிலையில் ம... சபை வந்தால்... ... லங்கையில் ஒரு ... வது உத்தியோகம் ... முடியாத நிலை ஏற்... டும். எல்லாத் தமிழ... கும் யாழ்ப்பாணத்... தியோகம் கிடைத்து...

மாவட்டசபை அ... பட்டால், யாழ்... மாவட்ட சபையின் ... ங்கும் கந்தோர்களி... காலி இடங்கள் ... ஞல் தமிழர்கள் தா... குத் தெரிவுசெய்யப்... கள். சிங்களவரும் வ... பம் செய்தால்கூட ... தான் தெரிவுசெ... வர். இதே போல்த... களப் பகுதிகளி... மாவட்டசபையின்சி... கும் கந்தோர்களில் ... வரே தெரிவுசெய்ய... இலங்கையின் தலை... கொழும்பில் தான் ... தலைமைக்காரியால... உண்டு. கொழும்... ஆயிரக்[...]க்கான ... கள் உத்தியோகம் ... ருர்கள். கொழும்பு ... சபையின் நிர்வாகப... த்தில் தான் நடை... இந்த நிலையில் ... சபை வந்தபின் ஒ... னுக்காவது கொ... உத்தியோகம் கிடை...

தமிழர் சிங்களத்... ச்சி பெற்றிருந்... கொழும்பில் உத... களுக்குச் சிங்கள... தெரிவுசெய்யப்படு...

வடக்கு, கிழக்கு... ணங்களில் வாழும் ... ளிலும் பார்க்க ம... மாகாணங்களில் அ... தமிழர்[...] வாழ்கி... மாவட்ட சபைவந்... மாகாணங்களில் ... தமிழர்கள் குறிப்ப... நாட்டுத் தமிழர்க... தனித் திங்களத்... அரசாங்கத்துடன்... கொள்ளவேண்டிய...

[8-ம்பக்கம் பா...

## பிரச்னைகளை சுலபமாகமாவட்ட சபை மூலம் தீர்க்கலாம

— மு. பாக்கியநாதன் —

ஸ்தலஸ்தாபன வரிசையில் கிராமசபை, பட்டின சபை, நகரசபை, மாநகர சபை என வளர்ந்து வந்து அடுத்தபடியாக உருவாகும் ஸ்தாபனமே மாவட்டசபையாகும். மேற்கூறிய சபைகள் தமக்கெனக் குறிப்பிட்ட எல்லையினை வகுத்து மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் சில அதிகாரங்களைப் பெற்றுத் தம் கடமையினைச் செய்கின்றன. இதுபோலவே மாவட்டசபையும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் சில அதிகாரங்களைப் பெற்று மத்திய அரசாங்கத்தின் சில நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று நடாத்தும். இம்மாவட்ட சபை நாட்டைப் பிளவு படுத்திவிடும் என்று சிலர் கூறுகின்றனர். எந்த நாட்டிலாவது ஸ்தலஸ்தாபனம் நாட்டை பிளவுப்படுத்தி தனிநாடாகப் பிரிந்துசென்றது உண்டா? வேருெரு சாரார் கூறுகின்றனர், மாவட்டசபை வந்தால் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும்தான் தமிழில் நடைபெறும் ஏனைய ஏழு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் நிலை என்ன'' என்று கேட்கின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் சிங்கள மக்கள் இருக்கிருர்கள் தானே! இதன்காரணமாக இங்கு ஒரு சிறு பகுதி சிங்களத்தில் கடமையாற்றவேண்டும். இதுபோலவே மற்றைய ஏழு மாகாணங்களில் உள்ள தமிழர்களுக்கும் இதே ஒழுங்கு செய்து கொடுப்பதே ஜனநாயகப் பண்பு. இத்தகைய கருத்தினைத் தேசிய அரசாங்கம கருத்திற்கொண்டு செயற்படும் என்பது என் கருத்து. அத்துடன் இன்று இருக்கும் நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழில் நிர்வாகம் நடைபெறுமென்ருல் அது நமக்கு ஓர் அளவு உரிமைகளைப் பெற்றுத் தருவதாகவே இருக்கின்றது. அத்துடன் தற்பொழுது இயற்றப்பட்ட தமிழ் மொழி விசேஷ விதிகளை அமுல் நடத்துவதற்கு இம் மாவடடசபை மிகவும் உறுதுணையாக இருக்கும்.

### பரீட்சித்துப் பார்க்கலாம

மாவட்டசபை அமைக்கும் கருத்தினை இற்றைக்கு ... ஆண்டுகளுக்கு முன்பு ''டொனமூர்'' விசாரணைக் குழு இலங்கைக்கு மாகாணரீதியில் மாவட்டசபையினை அமைக்க யோசனை கூறியது. இதனை ஒரு மாகாணத்தில் பரீட்சித்துப் பார்த்து அது வெற்றி அளித்திருப்பின் பின்பு மற்றைய மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கலாம் எனக் கூறினர். இது போலவே இவ் மாவடட சபையினையும் ஒரு மாவட்டத்தில் அமைத்துப் பரீட்சித்துப்பார்த்துஅது வெற்றியளித்திருக்குமாயின் பின் மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம். அடுத்து இம் மாவட்டசபைபற்றி 10 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் உள்ளூராட்சி பற்றி விசாரணை செய்த ''கொச்சி'' விசாரணைக்குழுவும் இம்மாவட்டசபையின் அவசியத்தை வற்புறுத்தின. அடுத்து ''பண்டார நாயக்கா-செல்வநாயகம்'' ஒப்பந்தத்திலும் இவ்வம்சம் இடம்பெற்றது. 1964-ம் ஆண்டிற்கு மூன் கொள்கையளவில் எல்லாக் கட்சிகளும் மாவட்டசபையினை ஆதரித்தன.

எதிர்க்கட்சியினர் இதனை எதிர்க்க வகுப்புவாதத்தினைக் கிளப்பிவிட்டுப் பிரசாரம் செய்கின்றனர். ஆனல் அதனைச் சிங்கள மக்கள் ஏற்கவில்லை என்பதனை நீர்கொழும்பு இடைத்தேர்தல் ஐயந்திரிபற நிரூபித்துள்ளது.

இன்றும் நாம் பிரித்தானியர் வகுத்து வைத்த கச்சேரி முறையிலேயே அடங்கியிருக்கின்ருேம். இது அவர்களின் குடியேற்ற நாட்டுப் பணிக்குழு ஆட்சியின் எஞ்சிய சின்னங்களாகத் திகழ்கின்றன. இதன் அடுத்தசின்னங்களாக அரசாங்க அதிபர், காரியாதிகாரி, கிராமசேவையாளர் ஆகியோர் திகழுகின்ருர்கள். இத்தகைய பணிக்குழு ஆட்சியினை நீக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டசபையிடம் இக்கச்சேரி அதிகாரங்களைக் கொடுத்தால் அது ஜனநாயகத்திற்கு ஓர் அகல்விளக்காக இருக்கும். இதன்பிரதிகள் அம்மாவட்டத்தில் இருப்பதனுலும், மக்கள் பிரதிநிதி என்பதனுலும் உண்மை நிலையினை அறிந்து அவர் கருமமாற்ற முடியும்.

மாவட்டங்களுக்கென இருக்கும் தனிப்பட்ட பிரச்னைகளை இலகுவில் இச்சபைகள் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். உதாரணமாக, யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்னை, மின்சாரப்பிரச்னை ஆகியவைகளை மாவட்ட ரீதியில் தீர்ப்பது சுலபம்.

## ஒற்றையாட்சி அல்லது தனித்தமிழ்நாடு

மாவட்டசபைகள் பிரதேச மனப்பான்மையை வளர்த்து, இலங்கையர் என்ற தேசியமனப்பான்மை வளர்வதைத் தடுக்கும். பிரதேச வெறி உருவாகும் போது இன ஒற்றுமை சீர்குலையும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இன்று தம்மீது இன்னேர் இனம் ஆதிக்கம் செலுத்த முற்படுவதினல் இறுக்கமான ஒற்றுமை கொண்டுள்ளனர். தமிழ்பேசும் மக்கள் பெருந்தொகையாகவாழும்மாவட்டங்களில் மாவட்டசபைகள் அமைக்கப்படும் பொழுது அங்கும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்று பேதம் ஏற்பட்டுப் பாம்பின்வாயில் அகப்பட்ட தவளையின் வயிற்றில்தேரை என்ற நிலை நிச்சயம் உருவாகும். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை சீர்குலையாமல் ஓங்கவேண்டுமானல் மாவட்டசபைகள் கோருவது கைவிடப்படல் வேண்டும்.

உலகில் உள்ள எந்த நாட்டிலாவது இன, மத, நிற, மொழிவாயிலாக ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்கள் தமது மொழி உரிமையை நிலைநாட்டவும் கலை கலாச்சாரம் பண்பாடு என்பனவற்றைப்பேணவும், சகலதுறைகளிலும் நாடெங்கனும் பெரும்பான்மை இனத்தவருடன் சமஉரிமை பெற்று வாழவும் மாவட்டசபைகள் வழிவகுக்கும் எனக் கருதி மாவட்டசபைகளை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிருர்களா? இடைக்காலத் தீர்வாகத் தன்னும் கருதி மாவட்டசபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்களா?

சமஷ்டி ஆட்சி முறையில் சிறுபான்மை இனத்தவர்கள் சகல உரிமைகளும் பெற்று வாழமுடியுமெனக் கூறுபவர்கள் சமஷ்டி நாடான அமெரிக்க நாட்டில் நிறவேற்றுமை காரணமாக இன்னும் பேதம் பாராட்டப்படுவதை அறியாதவர்களா? ஒற்றைஆட்சியில் உரிமைபெற முடியாவிடின் நாட்டினைப் பிரிப்பதன் மூலமே சிறுபான்மை இனம் தலைநிமிரமுடியும்.

'தமிழ்மாறன்'
யாழ்ப்பாணம்.

## 'இந்தியாவ... செல்லலா...

அட்டன் ...

''இந்தியாவுக்கு... இன்பமுடன் ... என்று இன்று ஒரு ... ணிக்கொண்டிருக்கி... காரணம் இன்று ... சொல்லப்படும் ... வுத்திட்டத்தின் ... நன்மை பெற்று ... என்பதாலேயே. ... எமக்குச் செய... என்று கூறப்படு... வாழ்வுத் திட்டத்... நாங்கள் நன்மை... வோமா? எந்த ... அந்த நன்மைகி... என்பதை நன்கு ... பின்னரே புனர்வா... டத்தை நம்பி ... செல்லவேண்டும்.''

இவ்வாறு அ... தனையச் சேர்ந்... நாகவத்தை ... தில் நடந்த இ... தொழிலாளர் க... தோட்ட தேர்தல்... தில் உரையாற்றி... தின் தலைமை அலு... முகர் திரு. கோ... கோவிந்தராசன் கூ...

பசுமலை மாவட்... வர் திரு. ஆறுமுகப்... ன்று வல்நடைபெற்ற ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ளையும் ...றிவிடும்

...ட யாழ்ப்பாணத்தில் ...ற்றுக்கணக்கான குடும் ...ங்கள் சிங்கப்பூர் பென்ஷன் ...ணத்தில் உயிர் வாழ்கின் ...ன.

இந்த நிலையில் மாவட்ட ...பை வந்தால்... தென்னி ...ங்கையில் ஒரு தமிழனு ...து உத்தியோகம் பெற ...டியாத நிலை ஏற்பட்டுவி ...ம். எல்லாத் தமிழர்களுக் ...ம் யாழ்ப்பாணத்தில் உத் ...யோகம் கிடைத்துவிடுமா? மாவட்டசபை அமைக்கப் ...ட்டால், யாழ்ப்பாண ...வட்ட சபையின்கீழ் இய ...கும் கந்தோர்களில் சில ...லி இடங்கள் உருவாகி ...ல் தமிழர்கள் தான அதற் ...த் தெரிவுசெய்யப்படுவார் ...ள். சிங்களவரும் விண்ணப் ...ம் செய்தால்கூட தமிழர் ...ான் தெரிவுசெய்யப்படு ...ர். இதே போல்தான் சிங் ...ளப் பகுதிகளிலுள்ள ...வட்டசபையின்கீழ் இயங் ...ம் கந்தோர்களில் சிங்கள ...ரே தெரிவுசெய்யப்படுவர் ...லங்கையின் தலைநகரான ...காழும்பில் தான் எல்லாத் ...லைமைக்காரியாலயங்களும் ...ண்டு. கொழும்பில்தான் ...யிரக்[illegible]க்கான [illegible]மிழர் ...ள் உ[illegible]யோகம் [illegible]ர்க்கி ...ர்கள். கொழும்பு மாவட்ட ...பையின் நிர்வாகம் சிங்கள ...தில் தான் நடைபெறும். ...ந்த நிலையில் மாவட்ட ...பை வந்தபின் ஒரு தமிழ ...க்காவது கொழும்பில் ...த்தியோகம் கிடைக்குமா?

# சபை காத்தரங்கு

...மிழர் சிங்களத்தில் தேர் ...சி பெற்றிருந்தால்கூட ...காழும்பில் உத்தியோகங் ...ளுக்குச் சிங்களவர்தான் ...தரிவுசெய்யப்படுவர்.

...வடக்கு, கிழக்கு மாகா ...ங்களில் வாழும் தமிழர்க ...லும் பார்க்க மற்ற ஏழு ...காணங்களில் அதிகமான ...மிழர்[illegible] வாழ்கி[illegible]றார்கள் ...வட்ட சபைவந்தால் ஏழு ...காணங்களில் வாழும் ...மிழர்கள் குறிப்பாக மலை ...ட்டுத் தமிழர்கள் அங்கு ...னிச் சிங்களத்தில்தான் ...ரசாங்கத்துடன்தொடர்பு ...காள்ளவேண்டிய நிலை ஏற்

[8-ம்பக்கம் பார்க்க]

## 'இந்தியாவுக்கு செல்லலாமா?'

அட்டன், ஞாயிறு

''இந்தியாவுக்குச் சென்று ...ன்பமுடன் வாழலாம் ...ன்று இன்று ஒரு சிலர் எண் ...க்கொண்டிருக்கின்றனர். ...ரணம் இன்று பலராலும் ...சால்லப்படும் புனர்வாழ் ...த்திட்டத்தின் மூலம் ...ன்மை பெற்றுவிடலாம் ...ன்பதாலேயே. ஆனால் ...க்குச் செய்யப்படும் ...ன்று கூறப்படும் புனர் ...ாழ்வுத் திட்டத்தின்மூலம் ...ங்கள் நன்மை பெறு ...ாமா? எந்தமுறையில் ...ந்த நன்மைகிடைக்கும் ...ன்பதை நன்கு சிந்தித்த ...ன்னரே புனர்வாழ்வுத்திட் ...த்தை நம்பி இந்தியா ...சல்லவேண்டும்.''

இவ்வாறு அக்கரப்பத் ...னையச் சேர்ந்த சின்ன ...கவத்தை தோட்டத் ...் நடந்த இலங்கைத் ...தாழிலாளர் கழகத்தின் ...ாட்ட தேர்தல் கூட்டத் ...் உரையாற்றிய கழகத் ...் தலைமை அலுவலகபிர ...ர் திரு. கோ. இ. து. ...விந்தராசன் கூறினர்.

...சுமலை மாவட்டத் தலை திரு. ஆறுமுகம் தலைமை ...ை டபெற்றது.

# சமஷ்டி நைஜீரியாவுக்கு ரஷ்ய இராணுவ உதவி?

லாகோஸ், ஆக. 20

ரஷ்யா, சமஷ்டி நைஜிரியாவுக்கு இராணுவ சப்ளைகளும், விமானங்களும் அளித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவிலிருந்து 15 போக்குவரத்து விமானங்கள். வடநைஜீரியாவிலுள்ள கானு விமான நிலையத்தில் வந்திறங்கியுள்ளதாக அவை கூறுகின்றன.

ஆனல் சமஷ்டி நைஜீரியா வட்டாரங்கள் இச்செய்தியை அங்கீகரிக்கவோ அல்லது மறுக்கவோ மறுத்துவிட்டன.

செக்கோஸ்லாவாக்கிய விமானங்களும் காறு விமான நிலயத்தில் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

## கற்கோவளத்தில் குடியிருக்ககாணி

பருத்தித்துறை, ஞாயிறு

கற்கோவளப் பகுதியில் முடிக்குரிய 35 ஏக்கர் காணி குடியிருப்புக்காகக் கொடுபடவிருக்கிறது இதற்கு வேண்டிய காணிக் கச்சேரி வடமராட்சி காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்றது. இதற்கு சுமார் இருநூற்று நாற்பது விண்ணப்பங்கள் வந்துள்ளன. அதில் நூற்றுக்கு அதிகமானவர்கள் பெண்கள். இக்காணி அரை ஏக்கர் வீதம் எழுபது குடும்பங்களுக்கு கொடுபடவிருக்கிறது.

# தேசீய பிரச்னைகள் தீருமா?

**- வ. ஞானச்சந்திரன் -**

இலங்கையில் உள்ள கச்சேரிநிர்வாகமுறை இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்த பொழுது ஏற்படுத்தப்பட்டதாகும் இந்த நிர்வாக முறையில் அரசாங்க அதிபர்கள் அரசாங்கத்தின் கட்டளைப்படி தமது பகுதிகளை நிர்வகித்துக் கொள்வார்கள். அரசாங்க அதிபரின் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களிடமிருந்து எந்தவித ஆலோசனையையும் பெறுவதுகிடையாது. மக்களின் ஆலோசனையை அரசாங்க அதிபர்கள் பெறுவதற்கு எந்தவித சந்தர்ப்பமும் இருக்கவில்லை. சுருங்கக் கூறினல் அரசாங்க அதிபர்களின் பகுதிக்குட்பட்ட பிரதேசங்களின் நிர்வாகத்தில் அப்பிரதேச மக்கள் எவ்வித பங்கும்எடுப்பதுகிடையாது. இம்முறையை ஆங்கிலேயர் ஏற்படுத்தியதற்குக் காரணம், மக்களது தலையீடு இன்றி நிர்வாகத்தை தாம் நினைத்தவாறு நடத்துவதற்கேயாகும். இம்முறை நிர்வாகம் இலங்கை ஆங்கிலேயருக்கு அடிமை நாடாக இருந்தகாலத்தில் ஏற்பட்டதாகும். இன்று இலங்கை சுதந்திரம் அடைந்து 10வருடங்களாகிவிட்டது. மேலும் இச்சுதந்திர இலங்கை ஜனநாயக ஆட்சிமுறையில் நம்பிக்கையுடைய நாடாகும். அப்பேர்ப்பட்ட ஒரு நாட்டின் மக்களது விருப்பமின்றி நிர்வாகம் நடத்தும் கச்சேரிமுறை நிர்வாகம் ஒழிக்கப்படல் வேண்டும். பாராளுமன்ற ஜனநாயகம் அதிகம்விருத்தியடைந்துள்ள இங்கிலாந்தில் நாட்டின் பகுதிகளை நிர்வகிப்பதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ':கவுண்டிக் கவுன்சில்கள்', (County Councils) என்னும் சபைகள் உண்டு. இச்சபைகளே நாட்டின் பல பகுதிகளில் பொது நிர்வாகம், கல்வி, சுகாதாரம் என்பனவற்றைக் கவனித்துவருகின்றன. அவ்வாறே சுதந்திர இந்தியாவிலும் ''டிஸ்றிக் போட்கள்'' (District - Boards) என்னும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் உண்டு. ஆகையால் பாராளுமன்ற ஜனநாசக ஆட்சியில் நம்பிக்கை வைத்திருக்கும்நம் இலங்கையும், இக்கச்சேரிமுறை நிர்வாகத்தை நீக்கி மக்களால் தெரிவுசெல்யயப்பட்ட பிரதிநிதிகளையுடைய மாவட்ட சபைநிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டும்.

இலங்கையில் கச்சேரி முறை நிர்வாகத்தை நீக்கி ஜனநாயக அடிப்படையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசசபை நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டும் என்று திருவாளர். எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் ஸ்தலஸ்தாபனமந்திரியாகக் கடமையாற்றிய காலத்தில் உத்தேசித்திருந்தார். 1964.ம் ஆண்டில் கூட்டரசாங்கத்தின் கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் நிதி அமைச்சராக இருந்த காலத்தில் கச்சேரி நிர்வாகமுறையைநீக்கி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பிரதேச சபை நிர்வாக முறையை அமைப்பதுபற்றி உத்தேசித்திருந்தார் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு மாவட்ட சபைகள் அமைப்பதுபற்றி சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறியுள்ளது. ஆகையால் இம் மாவட்டசபைகள் அமைப்பது ஒரு புதிய நோக்கம் என்று கொள்ளமுடியாது.

முதலில் அகில இலங்கை அடிப்படையில் இம்மாவட்ட சபைகள் அமைப்பதினுல் ஏற்படும் நன்மைகளை ஆராய்தல்வேண்டும். பின்பு இம்மாவட்டசபைகள் எந்த அளவிற்கு நம் நாட்டிலுள்ள பிரச்னைகளை தீர்க்கும் என்று அறிதல் வேண்டும். இலங்கையின் பலபாகங்கள் இன்னும் அபிவிருத்தியடையாத நிலையில் இருக்கின்றன. அப்பிரதேசங்களுக்கு கூடியகவனம் செலுத்துதல்வேண்டும் அப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்குத்தான், தங்களுடைய பிரதேச வளர்ச்சியில் அதிக கவனம் இருக்கும். மேலும் அவ்வப்பகுதி நிர்வாகத்தில் அவ்வப்பகுதி மக்களுக்கு, கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் அளிப்பது ஜனநாயகத்தின் பண்பாகும். மேலும் அப்பிரதேச மக்களுக்கு திருப்தி கொடுக்கும். இன்று இலங்கையில் பின்தங்கியுள்ள பிரதேசங்கள் சகல துறைகளிலும் முன்னேற இம்மாவட்ட சபைகள் வழிவகுக்கும்.

மாவட்டசபைகள் அமைப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும், சிங்கள, சோனக இனத்தவர்கள் நசுக்கப்படுவார்கள் என்று எண்ணப்படுகிறது. இம்மாவட்டசபைகள்ஸ்தல ஸ்தாபனங்கள் இயங்குவது போல வேறோர் மந்திரியின் கீழ் இயங்கும். சிறுபான்மையினர் துன்புறுத்தப்பட்டால் மந்திரி தலையிட்டு இச்சபைகளைக் கலைத்துவிடலாம். மேலும் எதிர்க்கட்சியினர் 'மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் தமிழர் தென்னிந்தியாவில் உள்ள திராவிட [illegible]கத்துடன்கூடி ஒரு தமிழ் அரசை நிறுவுவார்கள்'' என்பது அனர்த்தமானதாகும். ஏனெனில் இம்மாவட்ட சபைகளுக்குமாவட்டங்களில் உள்ள, பொது நிர்வாகம், கல்வி, சுகாதாரம் என்பவற்றைக் கண்காணிப்பதற்கு அதிகாரம் உண்டேஒழிய பிறநாடுகளுடன் ஒப்பந்தம் செய்யவோ அல்லது கூட்[illegible] எவ்வித அதிகாரமும் இல்லை.

# எம். ஜி. ஆர். ராதாவுடன் மூன்று மணி நேரம்

''எம். ஜி ஆர் வழக்கைப் பார்க்க வருகிறீர்களா?'' என்று கேட்டார், அன்பர் புரக்டர் நமசிவாயம். தம் புதல்வரை வைத்தியக்கல்லூரியில் சேர்ப்பதற்காக கொழும்பிலிருந்து அவர் சென்னைக்கு வந்திருந்தார். 'சிந்தனைச் செல்வர்' சிற்றரசு (எம். எல். ஸி.)யும் அவருடன் வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் இருந்தார்.

சிரிக்காதீர்கள்! எம். ஜி. ஆரையோ, எம். ஆர் ராதாவையோ இதுவரை நான் நேரில் கண்டதில்லை. எம். ஜி ஆர். இலங்கைக்கு வந்திருக்கையிலும் அவரைப் பார்க்கவில்லை. பல்லாயிரக்கணக்கானவர்கள் டிக்கெட்வாங்கி மழையில் நனைந்து பார்த்த சினிமா திலகத்தை, நேரில் பார்க்கும் சந்தர்ப்பத்தை விடலாமா? உங்களுக்கும் ஏதாவது சேதி சொல்லலாமென்று உடன் அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

சென்னை உயர்தர நீதிமன்றம் மிகப்பெரியது அழகானது. பல நீதிபதிகளின் உருவச்சிலைகள் உள்ளேயும் வெளியேயுமுள்ளன. அதன் மீது தான் புகழ்பெற்ற 'லைட் ஹவுஸ்' உள்ளது காலை மணி 10-45 இருக்கும். புரக்டர் நமசிவாயத்துடன் நீதிமன்றத்துக்குச் செல்லுகையில் புரக்டரைப் பார்த்து பலர் சிரித்துக் கைகூப்பினர். இலங்கையைச் சேர்ந்த ஒரு புரக்டருக்கு இங்குஇவ்வளவு செல்வாக்கு இருப்பதைக்காண வியப்பாக இருந்தது.

கோர்ட்டுக்கு வெளியே பெருங்கூட்டம். கதவண்டை பொலிசார் நின்று பலரையும் தடுத்துவிட்டனர். நமசிவாயத்தைக் கண்டதும், சிரித்துக்கொண்டே எங்களை உள்ளேவிட்டனர். அரசாங்க தரப்பில் வழக்கை நடத்தும் பப்ளிக் பிராஸிகூட்டர் கோகுல கிருஷ்ணனுக்குப்பின்புறமாகப்போட்டிருந்த இரு நாற்காலிகளில் நாங்கள் அமர்ந்தோம். எதிரிலே எம். ஆர். ராதா ஒரு கவலையும் அற்றவர் போல் கைதிக்கூண்டிலிருந்து தமது வழக்கறிஞருக்கு ஏதேதோ யோசனை சொல்லி அடிக்கடி சிரித்துக் கொண்டுமிருந்தார்.

## ஐயாறன் எழுதுகிறார்

கோர்ட்டுக் குள்ளாகவும் சற்றும் இடமின்றி கூட்டம். தாய்மார்கள் அதிகம். பெண் வழக்கறிஞர்களும் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக அமர்ந்திருந்தார்கள். நீதிபதிக்கு நேர் எதிரே பத்திரிகைக்காரர்கள் சுமார் 30 பேர் நெருக்கி நெருக்கி உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு வசதிபோதவே போதாது. வெளிநாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ள இவ்வித வழக்கு விசாரணையின் போதாவது, நிருபர்களுக்கு வசதியாக இருந்து எழுத போதிய ஏற்பாடு செய்யாதது பெரியகுறை. சென்னை பத்திரிகைக்காரர் சங்கம் இதைப்பற்றி கேட்கவில்லையா? இவ்வளவுவசதிக் குறைகள் இருந்தும் நிருபர்கள் விசாரணை விவரங்களை உடனுக்குடன் தங்கள் பத்திரிகைகளுக்குக் கொடுப்பது பாராட்டத்தக்கதாகும்.

சரியாக 11 மணிக்கு நீதி அரசர் லட்சுமணன் அவர்கள் வந்து கைகூப்பி வணக்கம்தெரிவித்து ஆசனத்தமர்ந்தார். நீதிமன்றத்திலிருந்த அனைவரும் எழுந்து நின்றோம். அவர் தலையில் 'விக். அணியவில்லை. மற்ற வழக்கறிஞர் போலவே கழுத்தில் விசேஷ பட்டையும், கறுப்புக் கோட்டும் அணிந்திருந்தார். ஐந்தாவது நாளாக சாட்சியமளிக்க எம். ஜி. ஆர். வேகமாக வந்து, சாட்சிக் கூண்டில் ஏறி எல்லாருக்கும் கை கூப்பி வணக்கம் தெரிவித்தார். அவர் தோற்றத்தைக் கண்டதுமே கவர்ச்சியாக இருந்தது. அழகான முகத்தில் பெருந்தன்மை பிரதிபலித்தது. அந்த மண்டபத்திலேயே அவரைப் போன்ற பிரகாசமான முகமுள்ளவர் வேறு யாருமில்லை. வந்துநின்ற சில விநாடிகளுக்குள் திரும்பிச் சென்றுவிட்டார். காரணம், எதிர் தரப்பு வழக்கறிஞர் வானமாமலை அவர்கள் இன்னும் வராததுதான் ஒரு நிமிடம் தாமதித்து வந்த அவ்வழக்கறிஞர் நீதிபதியிடம் தமது தாமதத்துக்கு வருத்தம் தெரிவித்ததும், எம். ஜி. ஆர். மீண்டும் சாட்சிக்கூண்டேறி நின்றார். தாழ்ந்த குரலில் அவர் பேசுவதால், அந்தக் கூண்டை நீதிபதிக்கு எதிரே மிக சமீபத்தில் அமைத்திருந்தார்கள்.

கேள்வி கேட்கும் வழக்கறிஞரையோ, கைதிக்கூண்டிலிருந்த எம். ஆர். ராதாவையோ, எம். ஜி. ஆர். பார்க்காமல்,. நீதிபதியைப் பார்த்தே 'டக் டக்' என்று பதிலளித்தார். தமதுபழைய நண்பர் ராதா கைதிக்கூட்டில் நிற்க அவருக்கு மாறாக இப்படி சாட்சியமளிக்க வேண்டியிருக்கும் நிலை பற்றி எம். ஜி. ஆர். சற்றும் நிம்மதியடையவில்லை என்பது அவரது முகபாவத்திலிருந்து தெரிந்தது. அடிக்கடி கையால் மூக்கைத் தடவிக்கொண்டும். தொண்டையால் 'க்குப்', 'க்கும்' என்று கனைத்துக்கொண்டும் இருந்தார். இடுப்பில் கறுப்பு, சிவப்பு கோடு போட்ட தி. மு. க. வேட்டி. மேலே நைலோன், ஜிப்பா அதன் மீது சிவப்பு, கறுப்பு கட்டம் போட்ட தி. மு. க வேஞ்சு வலக்கையில்கட்டியிருந்தரிஸ்ட்வாட்சை அடிக்கடி அவர் பார்த்தது, விசாரணை இன்னும்எவ்வளவு நேரம என்று கேளாமல் கேட்பது போலிருந்தது.

அன்று மூன்று மணி நேரம் விசாரணை. அவர் நின்று கொண்டே சாட்சியமளிக்கையில், எதிரி, எம். ஆர். ராதா, தமது கூண்டில் நாற்காலியில் உட்கார்ந்து எம். ஜி. ஆரையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். எம். ஜி. ஆர். மன்றங்கள், ரிவால்வர், 'நாத்திகம்' பத்திரிகையில் வந்த கட்டுரைகள், இரத்த வேற்றுமை முதலியவை பற்றி வானமாமலை அவர்கள் குடைந்து குடைந்து கேட்ட கேள்விகளுக்கு எம். ஜி. ஆர். சற்றும் பிடிகொடாத முறையிலேயே பதிலளித்தார். தமிழிலேயே கேள்வியும் பதிலும். நீதிபதியும் தமிழிலேயே கேள்விகளகேட்டு' விடைகளை ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டார். மொழிபெயர்ப்பாளர் யாருமில்லை. இவ்வித வழக்குகள் தமிழிலே நடப்பது கஷ்டமல்லவென்றும், அந்த நாள அதிக தூரத்தில் இல்லை என்றும் உணரக்கூடியதாக இருந்தது.

1-30 க்கு முடியவேண்டிய விசாரணை 2-10 வரை நீடித்தது. இடையிடையே குறுக்கு விசாரணை உஷ்ணமாகித்தணிந்தது. 'நீங்கள் சொல்வது பொய்' என்று எம். ஜி. ஆர். எதிர்தரப்பு வழக்கறிஞரைப் பார்த்து ஒரு சமயம் சொல்லிவிட்டு, இப்படிக் கூறவேண்டியிருப்பதற்காத் தம்மைத் தவருக நினைக்கப்படாதென்ருர். இது தொழில் பற்றிய விஷமென்றும் சொந்தத்தில் எடுப்பதில்லையென்றும், 'பொய்' என்று தாராளமாகச் சொல்லலாமென்றும் அவ் வழக்கறிஞர் சிரித்துக்கொண்டே சொன்னது. எம். ஜி. ஆரும் புன்னகை செய்தார். இருதரப்பு வழக்கறிஞர்களுக்கும் சில சமயம் பேச்சு தடித்தது. ஆனல் அன்று விசாரணை முடிந்து செல்லுகையில், இருவரும் மிக சகஜமாகப் பேசி, வழக்கு விசாரணையை இம் மாதத்துக்குள்ளாக முடித்துவிடவேண்டுமென்றும் மேலே நீடித்துக்கொண்டு போகப்படாதென்றும் பேசிக்கொண்டனர்.

சினிமா திலகத்தை சுமார் 3 மணிநேரம் பக்கத்திலிருந்து பார்க்கவும், அவர் பேச்சைக் கேட்டு, அவர் உள்ளத்தை உணரவும் முடிந்தது, என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும். இக்காட்சிகளை, மேற்குநாடுகளிலாயின், டெலிவிஷன்வைத்துக் காட்டியிருப்பர். ''ராதா அண்ணன் காமெடியனுக நடித்துள்ளாரா'' என்று கேட்டதற்கு, 'அவர் வில்லனுக நடிப்பதே காமெடியன்போலிருக்கும்'' என்று எம். ஜி. ஆர். கூறியதில் அர்த்தம் அதிகம் உண்டு. இந்த வழக்கிலே ராதா அண்ணன்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்

21-8-67
திங்கட்கிழமை
(ஆவணி மாதம் 5-ம் திகதி)

நட்சத்திரம் - சதயம் மாலை 5-30 வரை மேல் பூரட்டாதி
திதி- பிரதமை பகல் 9-12 வரை மேல் திதியை
சுபநேரம் - 12-05—1-35
ராகுகாலம் - 7-35—9-05

மேடம்-குருவிசுவாசம், சகோதர சுகம்
ரிஷபம்-வாகன நன்மை வந்திடும் லாபம்
மிதுனம்- புத்திரர் புகழ், பூமி விருத்தி
கடகம்- அன்னிய வாசம், அகால போசனம்
சிங்கம்- முகராசி, முயற்சியால் உயர்ச்சி
கன்னி- பங்காளி மேல் நம்பிக்கை பயன்தராது
துலாம்- தேடிவரும் உறவு கோடி நன்மை தரும்
விருச்சிகம்- தாலாட்டுப் பாடத் தயாராக விரு
தனுசு- வரவில் உயர்வு நற்பெயர்
மகரம்- சிந்தனை அதிகம், தாமதம்
கும்பம்- தாமத சித்தி, பணவிரயம்
மீனம்-பேச்சில் வெற்றி பொதுசன மதிப்பு

—சோதிடக்கலாநிதி—
**திருமலை வேலுப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரனுக்கு தலையில் அலவாங்கால் அடித்தாராம்

## விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

வல்வெட்டித்துறை ஞாயிறு

''என்னுடைய சகோதரன் வல்வெட்டித்துறையிலும், மட்டக்களப்பிலும் விவாகம் செய்தவர். மட்டக்களப்பில் விவாகம் செய்ததனால் எனக்கு அவர்மீது ஒரு கோடமுமில்லை. நான் வல்வெட்டித்துறையில் வசித்து வருகிறேன். சம்பவம் நடந்த தினம் இரவு 10 மணிக்கு கடற்கரைக்குப் போய்க்கொண்டிருந்தேன். எதிரி தமது வீட்டிலிருந்து என்னைக் கண்டபடி ஏசினார். பின்னர் வெளியில் வந்து என்னை அலவாங்காலும் கம்பியாலும் அடித்தார். தலையில் அடி விழுந்ததும் எனக்கு ஒன்றும் தெரியாது. இச்சம்பவத்தை எனது மனைவியும் எனது மற்றச் சகோதரரான கிருஷ்ணசாமியும் கண்டனர். அவர்கள் தான் என்னை பொலிஸுக்கும் ஆஸ்பத்திரிக்கும் கூட்டிச் சென்ரூர்கள்'' என்று சிவகுரு தில்லையம்பலம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது கூறினார்.

இவ்வழக்கு கடந்த வைகாசி மாதம் 10-ம் திகதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவகுரு சுப்பிரமணியம் என்பவர் அவரது சகோதரரான சிவகுரு தில்லையம்பலத்துக்கு அலவாங்காலும், கம்பியாலும் அடித்து காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

கிளிநொச்சியில்

# சீரான பஸ் சேவை இன்றேல் மக்கள் சத்தியாக்கிரகம் செய்வர்

## பதில் மந்திரிக்கு திரு. கா. பொ. இரத்தினம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி பஸ் சேவை திருப்திகரமான முறையில் அமையாவிடின் கிளிநொச்சி மக்கள் சத்தியாக்கிரகம் செய்வார்கள் என்று தேசியமய சேவை பதில் மந்திரி திரு. வெலகதவுக்கு கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் அறிவித்திருக்கின்றார்.

பண்டிதர் இரத்தினம் பதில் மந்திரிக்கு இது சம்பந்தமாக அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்திருப்பதாவது:-

பலகாலமாக கிளிநொச்சி பஸ் சேவைபற்றி பார்லிமெண்டிலும் உங்கள் அமைச்சிடமும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருக்கிறேன். பஸ் சேவையால் கிளிநொச்சிப்பகுதி மக்கள் படும் கஷ்டத்தைப்பற்றி தெளிவாக உங்கள் அமைச்சின் கவனத்துக்குக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. கிளிநொச்சி பஸ் சேவையைச் சீர்ப்படுத்துவதற்கு 6 பஸ்களை உடன் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யுங்கள். அத்துடன் பஸ் திருத்தும் நிலையமொன்றையும் அமைத்துத்தரவும். இல்லாவிட்டால் இப்பகுதி மக்கள் சத்தியாக்கிரகம் செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பகாய் இயக்க பிரமுகர்கள்

யாழ்ப்பாணம் திங்கள்

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 7-ந்திகதி தொடக்கம் 11-ந்திகதிவரை புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆசியக்கண்ட பகாய் மகாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் வழியில் மலாயாவைச்சேர்ந்த திரு வாசுதேவனும் தெஹ்ரானைச் சேர்ந்த கே. சமந்தாரியும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று பகாய் இயக்கம் பற்றி எடுத்துரைப்பது தமது நோக்கம் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

# நூலகவருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண நூலகச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். பொதுசன நூலகத்தில் நாளை காலை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சந்தேக நபர் தலைமறைவு

காங்கேசன்துறை ஞாயிறு

கீரிமலை கருகம்பனையைச் சேர்ந்த குணசிங்கம் என்பவரின் வீட்டிற்குள் இரவு நேரத்தில் புகுந்து காரை திக்கிரையாக்கி அவருக்கும் அவரது தாயாருக்கும் காயமேற்படுத்தியதாக குணசிங்கத்தின் மனைவி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

குணசிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது நிலைமை மோசமாயுள்ளதால் இவரது வாக்கு மூலம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

இது சம்பந்தமாக கீரிமலையைச் சேர்ந்த செல்வராசா என்பவரைப் பொலிசார் தேடிவருகின்றனர். காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலய அதிகாரி திரு எஸ்.வி.மூர்த்தி தீவிர புலன் விசாரணை செய்துவருகிறார்.

### பொலிஸில் ஒப்படைத்தனர்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை அல்லது சவடால் கிளி என்று அழைக்கப்படுபவர் செல்வச்சந்நிதி கோவிலில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய போது பொலிஸ் சார்ஜன்ட் திரு. வடிவேலுவினால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்தபோது அவர் மீது ஏற்கனவே காங்கேசன்துறைப் பொலிசார் வரண்ட் பிறப்பித்திருந்தது தெரிய வந்தது. சந்தேக நபர் உடனேவல்வெட்டித்துறை பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

### சிறந்த விவசாயிக்கு பரிசு

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜத்தினர் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் சமாஜ விழாவின் போது பம்பாய்வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய உப உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்பவர்களுக்குப் பரிசு வழங்கிக் கௌரவிக்கவிருக்கின்றனர்.

### காரியாதிகாரி

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவி புதிய பிரிவுக்காரியாதிகாரியாக திரு. எஸ் கணேசநாதன் பதவியேற்றுள்ளார்.


எங்கும் எல்லோரும் விரும்பிக் கேட்பது யானை

கிறீம் சோடா

கிறீம் சோடாவின் பொங்கும் நுரையையும் இனிமையையும் அறிய அதனை அருந்திப் பாருங்கள்




எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்

கொழும்பு - கண்டி - திருகோணமலை

GRANTS 130


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டி அடுத்தமாதம

சுழிபுரம், திங்கள் வலி. மேற்குப் பிரிவு இரண்டாவது விளையாட்டுப் போதனாசிரியர் திரு. கா. அரிச்சந்திரா விளையாட்டுத் துறையில் இருவார விசேஷ பயிற்சி பெற கொழும்பு சென்றுள்ளதால், மேற்படி பிரிவு விளையாட்டுப்போட்டி அடுத்த மாத முற்பகுதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. கீரிமலைச் சம்பவம்:

## 7 வழக்குகளைத் தாக்கல் செய்வர்

யாழ்ப்பாணம், திங்கள் ஆலயப்பிரவேசம் சம்பந்மாக 7 வழக்குகளை பொலிசார் இம்மாத முடிவுக்குள் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரிகின்றது. ஏற்கனவே அச்சுவேலிப் பிள்ளையார் கோவில் நிர்வாகஸ்தர் மீது பொலிசார் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். (ந. நி.)

## இந்தியாவில் பயிற்சி பெறுவார்

பண்டத்தரிப்பு, ஞாயிறு குடிசனமதிப்பு இலாகாவில் புள்ளிவிபரப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. நாகலிங்கம் ஒருவருட விசேஷ பயிற்சிக்காக இந்தியா சென்றுள்ளார். கொழும்புத்திட்ட உதவியில் சென்றுள்ள இவர் இளவாலைபுனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவரும் பெரியவிளானைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளையின் மகனுமாவார்.

## பதவி உயர்வு

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு கொழும்பு இலங்கை வங்கி உயர்தர சிறுப்பர் திரு. வி. எஸ். கந்தப்பு, பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை மனேஜராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த திரு. கந்தப்பு, சமூகசமயத் துறைகளில் மிகவும் ஈடுபாடுடையவரென்பதும், நீர்கொழும்புச் சைவமகாசபை தலைவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த மகாநாடு

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு ஸ்ரீலங்கா ஜாதிக சங்க வருடாந்தம காநாடு இம்மாதம் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெறுமென்றும், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் செல்லும் ஆசிரியர் பங்குபற்றும் இம்மகாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் படவிருப்பதாகவும் தெரிகிறது.

## கஞ்சாவுடன் கைது

வல்வெட்டித்துறை, ஞாயிறு தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவரை மாறு வேடத்தில் சென்ற பொலிசார் சந்தேகத்தின் மீது நிறுத்திப் பரிசோதனை செய்தபோது அவரிடம் 4800 கிறைன்ஸ் கஞ்சா இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. பொலிசார் அவரைக் கைது செய்து பொருளைப் பறிமுதல் செய்தனர். தமது பெயர் நாகேஷ் நவரத்தினம் என்று அந்நபர் பொலிசாரிடம் சொன்னார்.

## 'ஸ்டார்' வெற்றி

ஏழாலை லிங்கன் கோஷ்டியினருக்கும் உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நேற்றுமுன்தினம் ஏழாலையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. லிங்கன் கோஷ்டியினர் 3 கோல்களும், ஸ்டார் கோஷ்டியினர் 5 கோல்களும் பெற்றுக்கொண்டனர்.

திரு எம். கலியாணகிருஷ்ண சுந்தரர் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## 'வைத்தியசாலை வேண்டும்'

சுழிபுரம், ஞாயிறு பனிப்புலம் கிராமத்துக்கு ஒரு வைத்தியநிலையம் உடன் திறந்துதரும்படி பனிப்புலம் அம்பாள் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் வேண்டியுள்ளனர். இக்கோரிக்கை வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கம் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பீடிப்புகையிலைக்கு மதிப்பில்லை?

பண்டத்தரிப்பு, வெள்ளி இப்பகுதி விவசாயிகள் பயிரிட்ட பீடிப்புகையிலையை சங்கங்கள் இன்னும் கொள்வனவு செய்யாமலிருப்பதால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர், இந்நிலை வேறுபல பகுதிகளிலும் நிலவிவருகிறதாம். எதிர்காலத்தில் பீடிப்புகையிலைச் செய்கையில் விவசாயிகள் அதிககவனம் செலுத்தமாட்டார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது,

## பரிதாப மரணம்

கோப்பாய், ஞாயிறு இருபாலையிலுள்ள கேணியில் நீராடுவதற்குச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த திரு. இளையதம்பி பொன்னுச்சாமி என்பவர் [வயது 45] கேணிக்குள் சிக்கி மரணமானார்.

மரணமானவர் ஒரு சுருட்டுத் தொழிலாளியென்றும், இரு குழந்தைகளுக்குத் தந்தையென்றும், மரண விசாரணையின்போது தெரியவந்தது.

மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் மதுபோதை காரணமாக தவறிவிழுந்ததால்ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## அரசாங்க அதிபர் மகாநாடு

கொம்பனித்தெரு, ஞாயிறு இலங்கையிலுள்ள இருபத்தி இரண்டு மாவட்டங்களிலுள்ள அரசாங்க அதிபர்கள் மகாநாடு ஒன்றை உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா செப்டம்பர் நடுப்பகுதியில் அமைச்சின் காரியாலயத்தில் கூட்ட இருக்கின்றார். இந்த மகாநாட்டில் அரசாங்க அதிபர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள விவசாய வளர்ச்சியைப் பற்றி ஒரு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பார்கள். அத்துடன் தங்கள் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் பெறுவதில் உள்ள கஷ்டங்களையும் எடுத்துக்கூறுவர்.

## சொற்பொழிவு

சுன்னாகம், திங்கள் சுன்னாகம் பட்டின சபை ஆய்வுக் குழுவினால் சுன்னாகம் பொதுசன நூல்நிலைய முன்றலில் நாளை 22-ம் திகதி நடத்தப்படவிருக்கும் கருத்தரங்கில் இரசிகமணி கனக செந்திநாதன் 'பாரதிக்குப் பின் தமிழ்க் கவிஞர்' என்ற தலைப்பில் பேசுவார்.

# 'நீர்கொழும்பு வெற்றி உங்களால் கிடைத்தது'

## பருத்தித்துறையில் தபால் மந்திரி

— நமது நிருபர் வி. பழனிப்பிள்ளை —

வல்வெட்டித்துறை, ஞாயிறு "கடந்தகால சூழ்நிலைகள் மாறி இப்போது சிங்கள-தமிழ் மக்களின் அரசாங்க ஆட்சி நடைபெற்று வருகின்றது. புதிய தபாற் கந்தோரை நிர்மாணிப்பதற்கு சகல உதவிகளையும் அளித்துள்ள மந்திரிக்கு நன்றி தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்."

சென்ற வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறைக்கு விஜயம் செய்த தபால் தந்தி பொதுமராமத்து மந்திரி மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமாவை வரவேற்றுப் பேசுகையில் பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மந்திரி மேஜர் மொண்டேகுஜெயவிக்கிரமா பேசுகையில் கூறியதாவது'

"உங்கள் பிரதிநிதி தனது தொகுதிக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார். புதிய தபாற் கந்தோர் சம்பந்தமாக என்னையும் மற்றும் சக உத்தியோகஸ்தர்களையும் சந்தித்து ஆகவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்துள்ளார். நீங்கள் உங்கள் தொகுதிக்கு நல்லதொரு எம். பி.யை தெரிந்தெடுத்திருக்கிறீர்கள். புதிய தபாற்கந்தோர் கட்டிடம் இரண்டரை லட்சம் ரூபா செலவில் 1 வருட 3 மாத திற்குள் கட்டி முடிக்கப்படும் என்றி உறுதிகூறுகிறேன்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா நாட்டில் தேதிய ஒற்றுமையை ஏற்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தியதையிட்டு மிகவும் பெருமைப் படுகிறேன். நீர்கொழும்புத் தேர்தலில் நீங்கள் தந்த ஒத்துழைப்பினால் வெற்றியீட்டியதையிட்டு நாம் எல்லாரும் பெருமைப் படுகின்றோம். எனது அமைச்சு மாத்திரமல்ல தேசிய அரசாங்கத்திலுள்ள எல்லா அமைச்சும் உங்களுக்கு உதவி செய்யும்.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. என். நடராசா பேசுகையில், எங்களுக்குள் அரசியல் வேறுபாடுகள் இருந்த போதிலும் பருத்தித்துறை எம். பி. எடுத்த முயற்சிகளை பாராட்டுகிறேன் என்றார். தபால் அதிபர் திரு. ஏ. எல். பெரேரா பேசுகையில், இரண்டரை லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் இப்பகுதியில் புதிய தபாற் கந்தோரைக் கட்டி முடிக்க முன்வந்துள்ளோம் என்றும் விரைவில் இவற்றை செய்து முடித்து வைப்போம் என்றும் கூறினார்.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் தபாற்கந்தோருக்கான அடிக்கல்லை மந்திரி நாட்டிவைத்தார். வரவேற்புக் கூட்டத்தின் பின்னர் தபால் அதிபர் திரு. வடிவேலு நன்றியுரை கூறினார்.

## தற்கொலை என தீர்ப்பு

காலி, ஞாயிறு தெரணியகலை ரஞ்சித் ரத்னபாலாவின் மரணம் சம்பந்தமாக மரண விசாரண நடத்திய திரு. டட்லி சமரவிக்கிரமா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். தனது காதலியைக் கத்தியால் பலமுறைகுத்திவிட்டு, தானும் நச்சுத் திராவகம் அருந்தி ரஞ்சித் தற்கொலை செய்துகொண்டார்.

## உடுப்பிட்டிக்கு நவீன தபால் நிலையம்

உடுப்பிட்டி, ஞாயிறு 'உடுப்பிட்டித் தொகுதி மக்கள் விவசாயத்துறையில் அதிக அக்கறை கொண்டுள்ளார்களென்பதை அறிந்துள்ளேன். இங்குள்ள விவசாய வயல்களுக்குச் செல்லும் வீதிகளைத்திருத்த என்னாலியன்ற நடவடிக்கைகள் எடுப்பேன். என்னுடன் இங்கு விஜயம் செய்திருக்கும் உதவி மராமத்து டைரக்டர் இவ்விஷயங்களைக் கவனிப்பார். தபால், தந்தி விஷயத்தில் உடுப்பிட்டித் தொகுதியில் நான் பல முன்னேற்றங்களைச் செய்துதருறேன். 1970-ம் ஆண்டிற்கு முன்னர் உடுப்பிட்டித்தொகுதியில் நவீன தபால் நிலையம் ஒன்றை நிறுவித்தருவேன் என்று உறுயளிக்கின்றேன்.'

இவ்வாறு தபால் தந்திப் போக்குவரத்து, மராமத்து அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா கரவெட்டித் தபால் நிலையத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் பேசுகையில் கூறினர். உத்தியோகபூர்வமாக முதல்தடவையாக உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம் செய்த அமைச்சரை நெல்லியடியிலிருந்துஉடுப்பிட்டிஎம். பி. திரு. மு. சிவசிதம்பரம் மாலையிட்டு வரவேற்றார். பின்னர் கரவெட்டி தபாற் கந்தோருக்கு அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

தபால் ஊழியர்களினால் அளிக்கப்பட்ட வரவேற்பிலும் அமைச்சர் கலந்துகொண்டார்.

இவ்வரவேற்பு உபசாரத்துக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமைவகித்தார்.

## தேநீர்கடை தீக்கிரை புலன்விசாரணை தொடர்கிறது

பருத்தித்துறை, செவ். வல்லிபுரக் கோவிலுக்கு முன்பாகவுள்ள தேநீர்கடை தீக்கிரையானது சம்பந்தமாக, பருத்தித்துறை பொலிஸார் தீவிரமாக புலன்விசாரணை செய்து வருகின்றனர். இத்தேநீர்க் கடையின் பின்பக்கத்தில்கட்டப்பட்டிருந்த மூன்று ஆடுகளும் தீக்கிரையாகின,

இத்தீவிபத்துக் காரணமாக 2000 ரூபா பெறுமதியான பொருட்கள் தளபாடங்கள் உட்பட சுமார் 5000 ரூபாவிற்கு சேதமேற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இத்தீவிபத்திற்கான காரணம் எதுவென்த் தெரியவில்லை. பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி திரு. வி. செல்லையா, சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று தேநீர்க்கடையைப் பார்வையிட்டார்.

## இலவச குடிநீர் விநியோகம்

காங்கேசன்துறை, ஞாயிறு நேற்றுமுன்தினம் தொடக்கம் காங்கேசன்துறைப் பட்டினசபை மயிலிட்டி, காங்கேசன்துறை, ஊறணி ஆகிய கரையோரப் பகுதி மக்களுக்கு இலவச குடிநீர் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் குடிநீர் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.




சிறந்த ஜெம்ஸன் உங்களுக்கும் உங்கள் மகனுக்கும்

X சுருங்காதது
X இறுக்கமானது உறுதியானது
X விசேஷ உறுதியான பொக்கட்டுகள்
X அளவும் திறமையும் ஒருபோதும் மாறாதது
X பிழையான வேலை இல்லை என்ற உத்தரவாதம்
X ஒவ்வொரு சிறந்த கடையிலும்கிடைக்கும்.

வியாபாரிகள்

யாழ்ப்பாணம்:
தொலராம்ஸ், பிரதானவீதி.
தயராம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.

பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை

X திருக்கோணமலை
X மட்டக்களப்பு
X கல்முனை
X அம்பாறை
X மன்னார்
X காங்கேசன்துறை

வர்த்தக விசாரணைகள்:-
லக்கிபைவ் இண்டஸ்றீஸ்
155, பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184

கால்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எம். ஜி. ஆர் — எம். ஆர். ராதா வழக்கு

# எம். ஜி. ஆரும் முதலமைச்சர் அண்ணுவும் நண்பர்களா?

## வழக்கறிஞர் வானமாமலை கேள்வி

### செவ்வாய்க்கிழமை சகரபாணி சாட்சியமளிப்பார்

சென்னை, ஆக. 19

தமிழக முதலமைச்சர் திரு. சி. என் அண்ணுதுரையும் மற்றும் தமிழக அமைச் சர்களும் எம். ஜி. ஆரின் நண்பர்களா என்பது பற்றி தமக்கு ஒன்றும்தெரியா தென்றும் எம். ஜி. ஆரை ஆஸ்பத்திரியில் திரு. அண்ணுதுரை சென்று பார்த் தது பற்றித் தாம் பத்திரிகை மூலமாக அறிந்து கொண்டதாகவும் சமீபத் தில் வார்ணிஷ் அருந்தியதால் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களைக்கூட திரு. அண்ணுதுரை சென்று பார்வை யிட்டார் எனவும் இதனுல் எம். ஜி. ஆரை நட்பு முறையில்தான் திரு. அண்ணுதுரை ஆஸ்பத்திரியில் சென்று பார்வையிட்டார் எனச் சொல்லமுடி யாதெனவும் இன்று எம். ஜி. ஆர். — எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது சாட்சிய மளித்த பொலிஸ் சுப்ரீண்டன் திரு. நைனுதுரை கூறினுர்.

திரு. நைனுதுரை எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. வானமாமலையால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடைபெற்ற போது நான் செங்கல்பட்டு மாவட்ட பொலிஸ் சுப்ரீன் டனுகப் பணிபுரிந்தேன். உதவிப்பொலிஸ்கமிஷனரிட மிருந்து கிடைத்த டெலி போன் அறிவித்தலைத் தொடர்ந்தே நான் இது சம் பந்தமாக விசாரணையை நடத்தத் தொடங்கினேன்.

திரு. அண்ணுதுரை சமர்ப் பித்த சத்தியக் கடதாசி யைத்தொடர்ந்துராதாவின் வழக்கறிஞரான திரு. குமார மங்கலம் சென்னை ராஜ்யத் தைத் தவிர்ந்த ஒரு ராஜ்யத் தில் வழக்கை நடத்தவேண் டும் எனக்கோரி சமர்ப்பித்த மனு வாபஸ் பெறப்பட் டது பற்றித்தெரியுமா என எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆரம்பத்தில் திரு. நைனு துரையைக் கேட்டதற்கு தாம் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசா ரணை நடத்தியதாகவும் சம் பவம் நடைபெற்ற காலத் தில் தேர்தல்வேலைகள் நடை பெற்றுக்கொண்டிருந்த தால் விசாரணையைத் தாம் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் மற்ற வர்களிடம் இந்த வேலையை ஒப்படைத்ததாகவும் திரு. நைனுதுரைதெரிவித்தார்.

சினிமா டைரக்டர் நீல கண்டனும் சாட்சியமளித் தார். தொடர்ந்து விசா ரணை நடைபெறுகிறது.

எம். ஜி. ஆரின் சகோதர ரான திரு. எம். ஜி. சக்ர பாணி வரும் செவ்வாய்க் கிழமை சாட்சியமளிக்க விருக்கிருர்.

---

## சடலம் தோண்டி எடுக்கப்படும்

காலி, ஞாயிறு

கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட காலி வாசி யான என். எல் கே. கமத் துன்னின் சடலத்தைத் தோண்டி எடுக்கும்படி காலி மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் இன்று உத் தரவிட்டார். திங்கட் கிழமை சடலம் தோண்டி எடுக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. கொழு ம்பு சட்டவைத்திய அதி காரி டாக்டர் டபிள்யூ டி. எல். பெர்ணுண்டோ பிரேத பரிசோதனை நடத்துவார்.

இவ்வழக்கில் காலி கட்டு கொடையைச் சேர்ந்த பி. எம். எம். மசூரும் அவரது தகப்பனுர் எம். எம். தாசி மும், டி. ஜி. ஜி. குணபா லாவும் தளபாடங்களை வாடகைக்கு விடுபவரான கமத்துன்னைக் கொலைசெய்த தாகக் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது. காலி சட்டவைத் திய அதிகாரி டாக்டர் டி பி. கே. டி. சில்வா ஏற்க னவே பிரேத பரிசோதனை நடத்தியபோதிலும், மரணம் எப்படிச் சம்பவித் தது என்பதுபற்றி சொல்ல முடியாதிருக்கிறதெனத் தெரிவித்தார்.

துறைமுகத் தொழிலாள ரான எம். எம். குணபாலா சாட்சியமளிக்கையில், 1 ம், 2 ம், 3 ம் எதிரிகள் இறந்த வரை அடித்ததைக் கண்ட தாகத் தெரிவித்தார்.

---

## திருட்டுக்கள் அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவில் தற்போது திருட்டுக்கள் தினமும் அதிக ரிக்கின்றன. சென்ற ஒரு வாரத்தில் இங்குமூன்று களவுகள் நடைபெற்றுள்ளதாக முல்லைத்தீவுப் பொலிசா ருக்கு முறைப்பாடுகள் செய் யப்பட்டபோதும் இதுவரை ஒருவரும் கைதாகவில்லை. முல்லைத்தீவுத் தியேட்ட ரொன்றில் படம் பார்க்கச் சென்ற ஒருவரது சைக்கிளை யும் யாரோ திருடி விட்ட னர். பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

---

### திருக்கோணமலைச் செய்திகள்

## விளையாட்டு அரங்கிற்கு ரூ. 20,000

### அரசாங்கம் நன்கொடை

திருகோணமலை, வெள்ளி

கிழக்கிலங்கையில் முதன்மைவாய்ந்தசுற்றுமதிலரங்கான திருகோணமலை 'மக்கெய்ஸர்' சுற்றுமதிலரங்கிற்கு விளையாட்டுத்துறை அமைச்சு ரூபாய் 20,000 அளித்துள்ளது. இப்பணம் விளையாட்டரங்கின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுமெனத் தெரியவருகிறது.

### சிறிமாவோ திருமலை வருவார்

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளைப்பிரதிநிதிகளின் முக்கிய ஆலோசனைக்கூட்டம் அடுத்தமாதம் 17-ந் திகதி திருக்கோணமலையில் நடைபெறவிருப்பதாகவும், இக்கூட்டத்தில் திருமலையில் சுதந்திரக் கட்சியை வளர்ப்பதுபற்றி ஆராயப்படவிருப்பதாகவும் தெரிகிறது. விரைவில் எதிர்க் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எம். பி. யும் இங்கு அழைக்கப்படவிருப்பதாக திருக்கோணமலை மாவட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரான திரு, எஸ். எச். சோமபாலா நமது நிருபரிடம் கூறினர்.

### தொழிற்சங்க கிளை

'ஈழம்வாழ்தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், அவர்களது நல்வாழ்விற்காகவும் அயராது உழைப்பதே எமது இயக்கத்தின் இலட்சியம். பாட்டாளிகளின் சுபீட்சத்திற்காகவே அன்று தொட்டு இன்றுவரை நாம் அரசாங்கத்திடம் போராடி வருகின்ருேம். இனியும் நமதுதொழிலாளர் உயர்வுக்காக என்றும் போராடிக் கொண்டேயிருப்போம்'' என்றிவ்வாறு திருக்கோணமலைத் தேயிலை ஏற்றுமதித் தொழிலாளர்கள் மத்தியில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கக் கிளையினைத் திறந்து வைத்துப் பேசிய இலங்கை வர்த்தக ஊழியர் சங்க உபதலைவர் திரு. வேர்ணன் விஜயசிங்கா கூறினர். இ. வ. ஊ. சங்கக் கிளை நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர் ஜனுப். ஏ. எம். பாருக், உபதலைவர்: திரு. கே. எச். ஜயதிலகா, செயலாளர்: திரு. எச். தயபால, உபசெயலாளர், ஜனுப் ஏ.ஸ்தையான் ஜமால்தீன், பொருளாளர் ஜனுப். கே. ஏ. எம். பாருக்.

திருவாளர்கள்: ஆர். ஜி. நந்தா, ஏ. எம். ஏ. ரஹுால், எம். பாவாடீன், ஜே. எட்லீ ஆகியோரடங்கிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல. த்திலு ள அவர்களது அச்சகத்தில் 19 7-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது..

### பிரிவுபசாரம்

இ. தி. மு.க. திருக்கோணமலைக் கிளையின்பொருளாளர், திரு. இரா. முருகையா தொழில் மாற்றம்பெற்று கொழும்பு செல்வது முன்னிட்டு இவருக்கு இ. தி. மு. க. திருமலைக் கிளை அண்மையில் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தது.

### ஆலய உற்சவம்

கிழக்கிலங்கையின் பிரசித்திவாய்ந்த வெருகலம்பதி சித்திரவேலாயுதசுவாமி ஆலய கொடியேற்றம் இம் மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 5-ந் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

---

### திருமலையில்

## ஆர். ஜி.யின் குடியேற்றத் திட்டம்?

மூதூர், ஞாயிறு

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளப் பற்று காரியாதிகாரி பகுதியில் அரசாங்க காடுகளை அழித்து, மீன்பிடியாளர்களை குடியேற்றுவதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர் ஜி. சேனநாயக்கா முயற்சிஎடுத்துவருகிருர் என அறியப்படுகிறது.

இதனுல் இப்பகுதியில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் நிலவிவருவதாக கூறப்படுகிறது. இவ்விஷயத்தை சாணி இலாகாவிற்கும், அரசாங்கத்திற்கும்அறிவிக்க இப்பகுதி தமிழ் வாலிபர்கள் அக்கறை எடுத்து வருகின்றனராம்.

இவ்விதம் வெட்டப்பட்டு வரும், முடிக்குரிய காடுகள் இறக்கக் கண்டியை அண்டியிருக்கும் கும்பிறுபிட்டி என்னும் இடத்தில் தொடங்கி குச்சவெளியை அண்டியிருக்கும் கலப்பையாறு என்னும்பகுதி வரையில் உள்ளதாகும்.

சுமார் 5 மைல் தூரம் வரை காடுஅழிப்பு வேலைகள் நடைபெற்று வருவதாகயும் தெங்குப்பயிர்களை நாட்டவும், மீன்பிடியாளர்களைகுடியேற்றுவதற்குமே இக்காடுகள் அழிக்கப்படுதாகவும் கூறப்படுகிறது.

---

### எம. ஆர். ராதாவின்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது, சினிமா டைரக்டர் ப. நீலகண்டனை முடிக்குரிய வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தார்.

'நல்லவன் வாழ்வான்' படத்தை தயாரித்து டைரக்ட் செய்ததாகவும், அப்படத்தில் எம். ஜி. ஆரும், ராதாவும் நடித்ததாகவும் கூறினுர்.

அந்தப் படத்தில் எந்தக் காட்சியிலாவது எம். ஜி. ஆர். தவறுதலாக சூட்டுக் காயத்துக்குள்ளாகினுர் என்பது நினைவில்லையென்றும், நடிகர் நம்பியார் அப்படத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடிக்கிருரென்றும், அப்படத்தில் எம். ஜி. ஆரின் உடைகளில் இரத்தக்கறைகள் இருப்பதைக் கண்டு அவர்மீது சந்தேகப்படுவது போன்ற காட்சி வருகிறதென்றும் குறுக்கு விசாரணையில் சாட்சி நீலகண்டன் தெரிவித்தார்.

படத்தில் எம். ஜி. ஆரின் துப்பாக்கிச்சூட்டுடன் செய்யப்பட்ட ஒலிப்பதிவு பற்றிய 'றெக்கோட்' எதுவும் கிடையாதென்றும், ஆனுல் சாட்சியினுல் அன்றைய தினம் வாஹினி ஸ்ருடியோ வாடகைக்கு எடுக்கப்பட்டது என்பதற்கு 'றெக்கோட்' எடுக்கலாமென்றும் சாட்சி நீலகண்டன் கூறினுர்.

கடந்த பத்து பதினைந்து வருடங்களாக எம். ஜி. ஆரைத் தெரியுமென்றும் சாட்சி மேலும் கூறினுர்.

எம். ஜி. ஆர். - ராதா சூட்டுச் சம்பவத்தில் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் றிவோல்வர் வாங்கப்பட்ட சென்னை, மவுண்ட்ரோட்டிலுள்ள கம்பனி ஒன்றின் காட்சி அறை மனேஜர் திரு. ஆர். எஸ். ஸ்கொட் சாட்சியமளிக்கையில், ராதாவினுடைய றிவால்வர் ஆரம்பத்தில் மாம்பலத்தைச் சேர்ந்த படடைரக்டர் ஆர். ஆர். சந்திரனுல் 1959ல் 820 ருபாய்க்கு வாங்கப்பட்டது என்று கூறினுர்.

எம். ஜி. ஆர். - ராதா இருவருடைய றிவால்வர்களும் சாட்சிக்கு காண்பிக்கப்பட்டபோது, அவர் கம்பனி கணக்குப் புத்தகத்திலுள்ள சீரியல் நம்பர்களை ஒப்பிட்டுப் பார்த்ததன் மூலம் ராதாவின் றிவால்வரை அடையாளம் காண்பித்தார்.

எம். ஜி. ஆரின் அண்ணன் சக்கரபாணி செவ்வாய்க்கிழமை சாட்சியமளிப்பார்.

---

### வல்லை நெசவு ஆலை...

[1-ம்பக்கத்தொடர்ச்சி]

கொடுத்துள்ளது இந்த ஆலையில் சுமார் 1300 பேர் பங்காளர்களாகச் சேர்ந்துள்ளனர். இவ்வருட முடிவில் இப்பங்காளர்களுக்கு இப்பங்கு லாபம் கொடுக்கப்படவிருக்கிறது. இதுவரை காலமாக இவர்களுக்கு பங்குலாபம் கொடுக்கப்படவில்லையாம். அத்துடன் இந்த ஆலையில் வேலை செய்யும் அநேகமான ஊழியர்களுக்கு 'தொழிலாளர் சேமிப்பு நிதியும்' வழங்கப்படவிருக்கிறது.

---

### தாளையடியில் தபால் மந்திரி

#### மும்மொழியிலும் வரவேற்பு

தாளையடி. வெள்ளி

பொதுவேலைத் தபால் தந்திப் பகுதி மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவிற்கு தாளையடியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

செம்பியன்பற்று கிராமசபைத் தலைவர் திரு. ஆ. ஐயம்பிள்ளை மாலைசூட்டி மந்திரியை வரவேற்ருர். தமிழ், சிங்கள மக்கள் மந்திரியை வரவேற்க நூற்றுக்கணக்கில் திரண்டிருந்தனர். ஊர்வலத்தில் கண்டிய நடனமும், மேளவாத்தியமும் இடம்பெற்றன.

ரோமன் கத்தோலிக்க பாடசாலை திறந்த வெளியரங்கில் வண. குவால் சுவாமிகள் மந்திரிக்கு மாலையிட்டுவரவேற்றனர்.

இப்பகுதி பின்தங்கிய தென்பதை நேரில் அறிந்துகொண்டதாகவும்,இப்பகுதியில் றேட்டுக்களை அமைப்பதாகவும் மந்திரி கூறினுர். பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் திரு. அ. தார்ச்சியஸ், திரு. எச். எம். மார்டின் சில்வா ஆகியோரும் இவ்வரவேற்பில் கலந்துகொண்டு மும்மொழியிலும் சொற்பொழிவாற்றினுர்கள்.

---

### வடக்கு கிழக்கிலுள்ள..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

படும். இதனுல் ஏழு மாகாணங்களிலுள்ள தமிழர்கள் அரை நூற்ருண்டு காலத்தில் சிங்களம் படித்து சிங்களவர்களாக மாறிவிடுவார்கள். அதன்பின் இலங்கையில் தமிழர் தொகை மிக மிகக் குறைந்துவிடும். இப்படி நடந்தபின் வடக்கு கிழக்கில் வாழுது தமிழர்களையும் படிப்படியாகச் சிங்களவர்களாக்குவது இலகுவாகிவிடும்.

---

### ஐயாறன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

குறைந்த தண்டனையுடன் விடுதலை பெற்று, மீண்டும் சினிமாத்துறையில் ஈடுபட முடியுமாயின் அதுபற்றி எம். ஜி. ஆரைவிட யாரும் அதிக மகிழ்ச்சியடையமாட்டாரென்ற உணர்ச்சியுடன் திரும்பினேன். பொலிஸ் வானில் எம். ஆர். ராதா காவலுடன் திரும்பிச் செல்லுகையில் என் மனதில் என்னையும் அறியாமல் வருத்தமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org